மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

மே – 2024 இதழ் – 05 சித்திரை – வைகாசி



29/04/2024 உலக நடன நாள்

மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 – மே – இதழ் - 05)

பதிப்புரிமை

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்



கிருஷ்ணதேவராயர் பிறந்த ஊர்

கிருஷ்ணதேவராயர் தேவிகாபுரத்தில் பிறந்தவரா?

ஆம். அப்படித்தான் பல வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இந்தகேள்விக்கு செல்வதற்கு முன் விஜயநகர பேர்ரசுவுக்கும் தேவிகாபுரத்திற்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொண்டு பின்பு முடிவுக்கு வரலாம்.



ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர்(பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை



தமிழகத்தில் விஜயநகர பேரரசின் ஆட்சி

விஜயநகரப் பேரரசு தோன்றும் போது தமிழகத்தின் வட பகுதியில் சம்புவராய அரசும் தென்பகுதியில் மதுரை சுல்தானிய அரசும் ஆட்சி செய்துகொண்டிருந்தன. வடபகுதியில் ஆட்சி செய்துகொண்டிருந்த சம்புவராய அரசுக்கு உட்பட்ட பகுதியாகத் தற்போதைய சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள், காஞ்சிபுரம் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் இருந்தன. திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூரை அடுத்துள்ள படவேடு சம்புவராயர்களின் தலைநகராக விளங்கிவந்துள்ளது.

குமார கம்பணாவின் படையெடுப்பு

குமார கம்பணாவின் தமிழக படையெடுப்பிற்கு முன்பே தமிழகத்தில் விஜயநகர அரசரான ஹரிஹரரின் தம்பி புக்கர் மதுரை மீது படைபெயடுத்து வெற்றி கண்டுள்ளார். புக்கர் விஜயநகர அரசரானதும் அவரது மகன் குமார கம்பணாவை அனுப்பி தமிழகத்தை வெற்றிகொள்ளச் செய்தார். குமார கம்பணா கி.பி. 1363 ஆம் ஆண்டு தமிழகத்தின் மீது நடத்திய படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படலாயின. குமாரகம்பணாவின் படையெடுப்பைப்பற்றி அவரது மனைவி கங்கா தேவி என்பவர் எழுதிய மதுரா விஜயம் என்ற நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

குமார கம்பணாவின் படையெடுப்பின் போது சம்புர்வராயர்களின் ஆட்சிப்பகுதியில் இராஜநாராயண சம்புர்வராயர் என்பவர் ஆட்சிசெய்துகொண்டிருந்தார். குமாரகம்பணா படையெடுப்பில் முதலில் காஞ்சிபுரம் கைப்பற்றப்பட்டுப் பிறகு 1363 இல் சம்பூர்வராயர்களை வென்று தமிழகத்தின் வடபகுதியான தொண்டை மண்டலத்தை விஜயநகர ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். இதனால் சம்பூவராயர்களின் தலைமையிடமான படைவீடு நாயக்கர்களின் தலைமையிடமாக மாறியது. பின்னர் குமார கம்பணா தனது படைபெயடுப்பால் தென்தமிழ்நாட்டைக் கைப்பற்றி அங்கிருந்த மதுரை சுல்தானின் ஆட்சியை ஒழித்து தமிழகத்தை விஜயநகர ஆட்சிக்குள் கொண்டுவந்தார்.

குமார கம்பணாவிற்குப் பிறகு 1363 முதல் 1463 வரை ஏறத்தாழ தமிழகத்தில் ஒரு நூற்றாண்டுகாலம் விஜயநகர பேரரசு சிறப்பாக விளங்கியது. அதன்பிறகு விஜயநகர அரசை மல்லிகார்சுன ராயர் மற்றும் விருப்பாக்ஷா ராயர் ஆகியோர்கள் ஆண்டுவந்தனர். இந்தக் காலத்தில் தமிழகத்தின் வடக்குப்பகுதியில் 1452 முதல் 1485 சாளுவ நரசிம்மர் என்பவர் ஆண்டுவந்தார். இவர் தலைமையிடமாகக் கொண்ட பகுதி தற்போதைய திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள படைவீடு மற்றும் தேவிகாபுரம் போன்ற பகுதிகள் ஆகும்.

இவ்விருபகுதிகளும் விஜயநகரப் படைகள் தங்கியிருந்த இடங்களாகும். சாளுவ நரசிம்மன் காலத்தில் தமிழகத்தை ஒட்டர், பாணர், முஸ்லீம் போன்ற அந்நிய படையெடுப்புகளில் இருந்து காத்துவந்தார். இவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர் தேவிகாபுரத்தில் வசித்து வந்த நரச நாயக்கர் என்ற படைத்தளபதி என்று அறியப்படுகிறார்..

நரசநாயக்கர்

விஜயநகரப் பேரரசின் தொடக்கத்திற்கு காரணமே வட இந்தியாவில் ஆண்டுவந்த டெல்லி சுல்தான்களின் தென்னிந்திய படையெடுப்புகள் தான். தென்னிந்தியாவில் வலுவாக காலூன்றியிருந்த இந்து மதத்தைக் காக்கவும் இந்துக்கள் முஸ்லீம்களைப் எதிர்த்துப் போராட வேண்டிய நிர்பந்தத்தின் காரணமாக, விஜயநகரப் பேரரசின் தலைமையிடமான ஹம்பியில் இருந்து படைவீரரர்கள் தென்னிந்தியா முழுவதும் அனுப்பப்பட்டனர். அவர்கள் தென்னிந்தியாவில் குறிப்பாகப் தமிழகத்தின் பல பகுதிகளில் வந்து குடியேறினர். குடியேறிய பகுதிகளில் அரண்மனைகளும் கோயில்களையும் கட்டத்தொடங்கினர். விஜயநகர அரசு ஒரு சிறந்த பேரரசு என்பதை முஸ்லீம்களுக்குத் தெரிவிக்கவே இவ்வாறு தமிழகத்தில் பல ஊர்களில் கோயில்கள் கட்டத் தொடங்கினர். அவர்கள் கட்டுவித்த கோவில்கள் இராஜகோபுரம், பெரியமதில் சுவர்கள், கல்யாணமண்டபங்கள் என பிரமாண்டமான அமைப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டன. இக்கோயில்களும், அரண்மனைகளும் கட்டி தம்முடைய அரசும் ஒரு சிறந்த பேரரசு என்பதை டெல்லி சுல்தானியத்திற்குத் தெரிவிக்க முயன்றனர். இவ்வாறு விஜயநகர அரசின் தலைமையிடமான ஹம்பியில் இருந்து அனுப்பப்பட்ட ஒரு படைத்தளபதியின் வாரிசாக இருந்தவர் நரசநாயக்கர் ஆவார். நரச நாயக்கரின் மூதாதையர்கள் அதாவது மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்பே வந்து தேவிகாபுரத்தில் குடியேறியிருந்தனர். ஆந்திராவைச் சேர்ந்த ஓ. ராமச்சந்திரய்யா என்பவரின் விஜயநகரத்துக் கிருஷ்ணதேவராயர் என்ற நூலிலும், கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியர் தீக்ஷிதர் என்பவர் ஆய்வுக்கட்டுரையிலும் கர்னாடக வரலாற்று அறிஞர் டாக்டர்.சூரியநாத் காமத் என்பவரின் ஆய்வுக்கட்டுரையிலும் இக்குடியேற்றத்தைப் பற்றிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன.

அதன் படி விஜயநகரப்பேரரசின் படைத்தளபதியாக அனுப்பப்பட்ட குண்டராஜு என்பவரே முதலில் தேவிகாபுரத்தில் படைதளத்தை அமைத்திருக்கவேண்டும். குண்டராஜு மகன்கள் திம்மராஜு மற்றும் சாளுவ நரசிம்மா என்பவர்கள் ஆவார். திம்மராஜுவின் மகன் ஈஸ்வரநாயக்கர், ஈஸ்வரநாயக்கரின் மகன் நரச நாயக்கர் ஆவார். நரச நாயக்கருக்கு சாளுவ நரசிம்மன் என்பவர் சின்ன பாட்டனார் என்ற உறவு முறை ஆகும். இதிலிருந்து இக்குடும்பத்தினர் மூன்று நான்கு தலைமுறையாகத் தேவிகாபுரத்தில் வசித்துவந்துள்ளனர் எனத்தெரிகிறது. மேலும் சாளுவ நரசிம்மன் என்பவர் வடதமிழ்நாட்டை 1452 முதல் 1485 முதல் ஆண்டுவந்தார் என ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது தமிழக வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர் நரசநாயக்கர் என்பதும் ஏற்கனவே அறிந்த ஒன்று. சாளுவ நரசிம்மன் 1485 முதல் – 1491 வரை விஜயநகரப் பேரரசை ஆண்டுவந்துள்ளார். அதற்கு முன் வடதமிழகத்தின் ஆட்சியாளராகப் படைவீடு, தேவிகாபுரம் போன்ற பகுதிகளை தலைமையிடமாக கொண்டுள்ளார். அவர் 1491 அம் ஆண்டு இறந்த பிறகு நரசநாயக்கர் பதிலாட்சியாளர் என்ற நிலைக்கு உயர்ந்து 1491 முதல் விஜயநகரப் பேரரசின் ஆட்சியாளர் ஆனார்.

நரசநாயக்கர் மற்றும் கிருஷ்ணதேவராயர் பிறப்பு

கிருஷ்ணதேவராயர் பிறப்பதற்கு மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்பே அவரது மூதாதையர்கள் தேவிகாபுரத்தில் குடியேறியுள்ளனர்கள் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. சாளுவ நரசிம்மா வடதமிழகத்தை ஆண்டுவந்தபோது அவரது படைத்தளபதியாக தேவிகாபுரத்தில் தங்கியிருந்த நரசநாயக்கர் தேவிகாபுரத்தில் பிறந்து வாழ்ந்துவந்தவர் என்பதற்கு முக்கிய ஆதாரங்களை ஓ. ராமச்சந்திரய்யா என்பவர் எழுதிய "விஜயநகரத்து கிருஷண்தேவராயா" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அதில் நரசநாயக்கரைப் பற்றி தெலுங்கு வராகபுராணத்தில் பாயிரத்தில் பத்தாவது பத்தியில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ధరణీనుత దేవకీపుర

వరనిలయ, శ్రీగిరిశ వరసంపన్న

శ్వర విభుతనయా, సాళువ

నరసింహ నృపాల దండనాయక తిలకా.

[தரணிநுத தேவகிபுர

வரநிலைய, ஸ்ரீகிரிஷ வரசம்பண்ண

ஷ்வர விபூதவய்யா, சாளுவ

நரசிம்ஹா ந்ருபால தண்டநாயக திலகா.]

(உலகம் போற்றும் தேவகிபுரத்தின்

வரபிரசாமாக திகழும் ஸ்ரீகிரிஈசனுடைய திருவருளைப்பெற்றவரும்


சாளுவ நரசிம்ம வம்சத்தை சிறப்பிக்க

ஈஸ்வர நாயக்கருக்கு பிறந்த திலகமே).

இப்பாடலில் உள்ள கருத்துக்களின் படி நரச நாயக்கரின் சொந்த ஊர் தேவிகாபுரம் என்பதும் அவர் ஈஸ்வர நாயக்கருக்கு மகனாப் பிறந்ததற்கு தேவிகாபுரத்தில் உள்ள ஸ்ரீகிரிஈசன் (திருமலை நாயனார்)காரணமென்று கூறப்பட்டுள்ளது. இதுவே, இவரை ஒரு பேரரசாராக மாறுவதற்கும் காரணம் என அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் நரச நாயக்கரின் தந்தை பெயர் ஈஸ்வரன் என்பதும் அவருடைய பாட்டியார், தேவகி என்பதும் முறையே தேவிகாபுரத்தில் உள்ள கனககிரிஈசனையும் பெரியநாயகி அம்மனையும் குறிக்கிறது என்றும் கருத இடந்தருகிறது.

மேலும், அவர் பெங்களூர் மித்திக் சொசைட்டியில் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துகளின் படி நரசநாயக்கர் சாதாரண படைத்தளபதியாக இருந்து விஜயநகரப் பேரரசின் ஆட்சியாளராக உயர்ந்ததற்கு தேவிகாபுரத்தில் உள்ள ஸ்ரீகிரிஈசன் என்று அவரது அவைப்புலவர் நந்திமல்லய்யா மற்றும் கந்த சிங்கையா என்பவர் தெலுங்கில் மொழிபெயர்த்த வராகபுராணம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். நரசநாயக்கரின் மகன் கிருஷ்ணதேவராயர், இவர் 1509 முதல் 1529 வரை விஜயநகர அரசை சிறப்பாக ஆட்சி செய்தவர். இவர் நரசநாயக்கர் தேவிகாபுரத்தில் படைத்தளபதியாக இருந்தபோது தேவிகாபுரத்தில் பிறந்துள்ளார் என்பது கன்னட வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் வலுவான ஆதாரத்தை கொண்டே பெறப்பட்டதாகும். கர்னாடக வரலாற்று பேராசிரியர் தீக்ஷிதர் மற்றும் டாக்டர் சூரியநாத் காமத் போன்றவர்களின் வரலாற்று ஆய்வுக்கட்டுரையில் கிருஷ்ணதேவராயர் ***"சந்தேகத்திற்கே இடமில்லாமல் தேவிகாபுரத்தில் பிறந்தவர்"*** *என்றும் அவரது முன்னோர்கள் மூன்று நான்கு தலைமுறைக்கு முன்பே தேவிகாபுரத்தில் குடியேறிவிட்டனர் என்றும் தெரிவிக்கின்றனர்.*

இவ்வாராய்ச்சியாளர்களின் கருத்துப்படி கிருஷ்ணதேவராயர் 1487 ல் பிறந்திருக்கிறார் என்று தெரிவித்துள்ளனர்.



Nayaka's father, Eswara Nayaka, the grandfather of Krishna Deva Raya, defeated the Bidar army at Kandukur, near Udayagiri.

Incidentally, the exact date of birth of Krishna Deva Raya was not known, until the first few decades of the 20th century. Many scholars, who thought that he was born on the birthday of Lord Krishna, proposed various dates. However, according to Mohanangi's *Marichi Parinayamu*, which came to light in 1929, her father, Krishna Deva Raya, was born in the *saka* 1393, year by name Vikruti, in the month of Pushya, on *bahula dwadasi* and in the weekday of *Sukravaram* (verse: 66). This corresponds to Friday 17th January 1471, the star of the day being *Jyesta*. He seems to have been named after Lord Krishna, either by his mother Nagamba, by his father Narasa Nayaka, or even by Salva Timmarasu, the minister of Narasa Nayaka. Though we have no information about his place of birth, scholars presume that he was born in Vijayanagara. However, he may have born in Devikapura or in Udayagiri; and, may have been named after Lord Krishna of Udayagiri. We shall look into this aspect later.

Salva Narasimha - Another Krishna

(Krishna says,) At that time, O Dharmaraja,
I would take birth in the lunar dynasty,
Punish the wicked and rule the earth
By becoming Salva Narasimha!

-Pillalamarri Pina Veerabhadra Kavi's
Jaimini Bharatamu: VIII. 213

Some of the subjects of Salva Narasimha seem to have viewed him as an incarnation of Lord Krishna, and looked forward to him to save the empire; for a stanza quoted at the beginning of this section from *Jaimini Bharatamu*, dedicated to Salva Narasimha by its author Pillalamarri Pina Veerabhadra Kavi, suggests the same. Incidentally, this verse exists only in one manuscript of the text, discovered at Guntapeta near Udayagiri; even then, it is interesting to note that while Narasa Nayaka's son, Krishna Deva Raya, was named after Lord Krishna, some of the subjects seem to have viewed Salva Narasimha as an incarnation of Lord Krishna.

68 Srinivas Sistla

The end of the Sangama dynasty - Penugonda

When the earth would be occupied by
The cheaters, abusers, ill-minded,
Those who bring down their own clan,
Those who display arrogance,
Those utterly mulish and the liars,
The Kali-*yuga* feels a sense of pride!

-Pillalamarri Pina Veerabhadra Kavi's
Jaimini Bharatamu: VIII. 212

Historians describe Virupaksha Raya as a man of a very different character from his father, uncle or even his predecessor, Mallikarjuna Raya. According to them, he cared for nothing but wine and women; besides, being whimsical and cruel.

In 1486, sick at the king's wickedness, his own eldest son murdered Virupaksha Raya, but refused to occupy the throne, for murdering his father. So, according to his wish, his younger brother, Proudha Deva Raya, was placed on the throne. According to historians, this new king was as bad, if not worse than, his father. Soon after the coronation, he killed his own elder brother. Incidentally, a few stanzas from *Jaimini Bharatamu* quoted at the beginning of this section, hints at the nature of the then ruler and his associates. At this juncture, Salva Narasimha sent his general, Narasa Nayaka, to take over the power. Accordingly, he marched by way of Ambur, near Vellore in South Arcot district, and finally reached the capital. Proudha Deva Raya, in alarm, escaped through his palace window and fled. With this, the Sangama dynasty came to an end. According to many scholars, this incident had taken place at Vijayanagara; however, it may have actually taken place at Penugonda.

Around 1486 itself, Purushottama Gajapati occupied Udayagiri, and it remained with the Gajapatis until Krishna Deva Raya recaptured it.

The Salvas of Chandragiri - The Tuluvas of Devikapuram

You, the resident of world-renowned Devakipura,
You, the son of Eswara

Sri Krishna Deva Raya *Amuktamalyada* 69

மேலும் கர்னாடக வரலாற்று அறிஞர் டாக்டர். சூரியநாத் காமத் என்பவர் தேவிகாபுரம் பற்றிய கல்வெட்டுகளின் பின்னே ஒரு வரலாறு என்று ஆவணப்படத்திற்கு நேரடியாக அளித்த பேட்டியிலும் கிருஷ்ணதேவராயரின் பிறந்த இடம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தேவிகாபுரம்தான் என்று உறுதியாகக் கூறியுள்ளார். இதற்குப் புறச்சான்றாக தேவிகாபுரத்தில் அமைந்துள்ள கனககிரிஸ்வரர் (அ) திருமலை உடைய நாயனார் (வடமொழியில் ஸ்ரீகிரிஈசன்) என்ற மலைக்கோயிலும், ஊரின் நடுவே அமைந்துள்ள பெரியநாயகியம்மன் கோயிலும் விஜய நகர ஆட்சியாளர்கள் கட்டுவித்த கோயில்கள் என்பதற்கு நேரடிச் சாட்சிகள் ஆகும்.

தேவிகாபுரத்தை அடுத்துள்ள நரசிங்கபுரம் என்னும் கிராமம் சாளுவ நரசிம்மனின் பெயரை இன்றும் தாங்கி நிற்பதும் அவ்வூரில் நரசிங்க பெருமாள் என்ற ஒரு பாழைடைந்த கோயில் இருப்பதும் இத்தகவல்களுக்கு மேலும் வலுசேர்ப்பதாகும். மேலும் தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் கோயில் கல்வெட்டு ஒன்று (இ.க.ஆ. 396/1912) இறைவன் பெயரை சமஸ்கிருதத்தில் ஸ்ரீகிரிசா என்றும் ஊரின் பெயரை தேவகிபுரம் என்றும் குறிப்பிடுகிறது.

இவையெல்லாம் கிருஷ்ணதேவராயர் தேவிகாபுரத்தில் பிறந்தவர் என்று கூறும் நேரடியான வரலாற்று சான்றுகள். உண்மையில் அவர் அங்குதான் பிறந்தாரா என்று ஐயம் வருவதும் அதற்கு வாய்ப்பில்லை என்று கூறுவதற்கும் வாய்ப்புள்ளது. வரலாற்று ஆய்வாளர்கள் இதை முன்னகர்த்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதாரம்

1.Studies of Krishnadevaray of Vijayanagara. – O. Ramachandraiya

2. The quarterly journal of Mythic society- 2005.

3. The life and achievement of Krishnadevaraya

4. Materials from Suriyanath Kamath in Karnataka.

5. Sri Krishnadevaray Mamuktamalyada – Edited by Srinivas sistla.

Dr. Dikshit has also consulted all published works on Krishnadevaraya like those by K. Raghavacharlu (*Srikrishadevaraya* 1960) and N. Venkataramanaiya (*Krishnadevarayalu,* 1972 and *Krishnadevarayalu Velugotivari Vamshavali,* 1939). The unpublished English thesis by Bhargavi Shivaiah (1972), the published English work, *Studies on Krishnadevaraya of Vijayanagara* (1958) by O. Ramachandraiya and another work by M. Rama Rao, *Krishnadevaraya* (1971). In addition, detailed sections on Krishnadevaraya and his adminstration in many works on Indian history or history of South India like the Bhavan's series. *History of South India* by Prof. Nilakantha Sastri, the *Mysore Gazetteer* by Hayavadana Rao and works on Vijayanagara by Robert Sewell were the important works consulted by Dr. Dikshit: In fact, it is Sewell who convincingly proved that Krishnadevaraya was the greatest emperor of the dynasty by basing his statement on the accounts of the Portuguese authors like Barbosa, Paes and Nuniz.


A very interesting remark by Babar, the contemporary Mughul ruler who conquered Delhi when Krishnadevaraya was at the height of his power (1526-29) is mentioned here by Prof. Dikshit. *Memoirs of Babur* (Tuzuk-i-Baburi) written originally in Turkish language describes Krishnadevaraya as the most powerful rulers of contemporary India (*Memories of Babar,* p. 199, translated by Beveridge, H).

The Saluvas from Karnataka

He has also discussed whether Krishnadevaraya was a Kannadiga. Undoubtedly Krishnadevaraya was having Telugu as his mother tongue, being born and brought up at Devikapuram in North Arcot district, his ancestors being posted there as officers for more than four earlier generations. His grandfather, Ishwaranayaka, was the son of Thimmaraju. Thimmaraju was the brother of Emperor Saluva Narasimha, and from at least the days of Gundaraju, the father of these two brothers (viz Iswaranayaka's father Timaraju and his brother Saluva Narasimha) or even earlier, the Saluva family must have been posted in that region, and marriages with local families made the local popular Telugu their mother tongue. This relationship of the families of Saluva Narasimha and Saluva Narasanayaka (Krishnadevaraya's father) is clearly stated in *Marichiparinayamu,* a Telugu work by Krishnadevaraya's poetess daughter Mohanangi. In the family tree given



வானியல் அறிவோம்





திரு.கா.பாலகிருஷ்ணன்
முதல்வர் மற்றும் தாளாளர்
பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி
திருச்சி–21





வார நாட்களின் பெயர் எவ்வாறு பெறப்பட்டன?

வார நாட்களான ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகியவை Sunday, Monday, Tuesday, Wednesday, Thursday, Friday, Saturday எனத் தமிழில் உள்ள அதே பொருளுடனேயே அழைக்கப்படுகின்றன. இந்த ஏழு நாட்களும் எந்த வரிசையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான தெளிவான விளக்கம் எங்கும் இல்லை. சுமேரியர்களிடமிருந்து, கிரேக்கர்கள் கற்றனர். கிரேக்கர்களிடமிருந்து ரோமானியர் கற்றனர் எனப் பொதுவாகவே கூறப்பட்டுள்ளது. இதற்கான சரியான விளக்கம் கிடைக்காததால் இம்மயக்கம் ஏற்பட்டிருக்கலாம். தமிழர்களிடம் இதற்கான தெளிவான விளக்கம் உள்ளது. 1955 இல் முதல் பதிப்பாக வந்த 'சாதக அலங்காரம்' எனும் புத்தகத்தில் உள்ள பாடல்களுள் ஒன்றில் இதற்கான விளக்கம் உள்ளது. இந்நூலின் ஆசிரியர் திரு கீரனூர் நடராஜன். இப்பாடல் பதினேழாம் நூற்றாண்டு ஓலைச் சுவடிகளில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

"அருக்கன் புகர்புந்தி யிந்துண்

மந்தனோ டந்தணன் சேய்

இருக்குங் கடிகை யிரண்டரையா

மிந்த ஓரைகளில்...."

(அருக்கன்-ஞாயிறு,

புகர்-வெள்ளி,

புந்தி-புதன்,

இந்து-திங்கள்,

துண்மந்தன்-சனி,

அந்தணன்-வியாழன்,

சேய்-செவ்வாய்)

பொருள்:

ஒரு நாளை ஞாயிறு, வெள்ளி, புதன், திங்கள், சனி, வியாழன், செவ்வாய் ஆகிய ஏழு கோள்களும், இரண்டரை இரண்டரை நாழிகையாகத் தம்முள் மாறி மாறிப் பங்கிட்டுக் கொள்கின்றன.

ஒரு நாள் = 60 நாழிகை

60 நாழிகை = 24 ஓரை

ஒரு நாள் = 24 ஓரை

மேற்சொன்ன வரிசையில் இரண்டரை நாழிகைகள் அதாவது ஓர் ஓரையை (ஒரு மணி நேரம்) ஒவ்வொரு கோளும் எடுத்துக்கொள்ள, 24 ஓரைகள் முடிந்து 25 ஆவது ஓரை எந்தக் கோளில் வருகிறதோ அக்கோளின் பெயரால் அந்த நாள் அழைக்கப்படும்.

1	ஞாயிறு	1	திங்கள்	1	செவ்வாய்	1	புதன்	1	வியாழன்	1	வெள்ளி	1	சனி
2	வெள்ளி	2	சனி	2	ஞாயிறு	2	திங்கள்	2	செவ்வாய்	2	புதன்	2	வியாழன்
3	புதன்	3	வியாழன்	3	வெள்ளி	3	சனி	3	ஞாயிறு	3	திங்கள்	3	செவ்வாய்
4	திங்கள்	4	செவ்வாய்	4	புதன்	4	வியாழன்	4	வெள்ளி	4	சனி	4	ஞாயிறு
5	சனி	5	ஞாயிறு	5	திங்கள்	5	செவ்வாய்	5	புதன்	5	வியாழன்	5	வெள்ளி
6	வியாழன்	6	வெள்ளி	6	சனி	6	ஞாயிறு	6	திங்கள்	6	செவ்வாய்	6	புதன்
7	செவ்வாய்	7	புதன்	7	வியாழன்	7	வெள்ளி	7	சனி	7	ஞாயிறு	7	திங்கள்
8	ஞாயிறு	8	திங்கள்	8	செவ்வாய்	8	புதன்	8	வியாழன்	8	வெள்ளி	8	சனி
9	வெள்ளி	9	சனி	9	ஞாயிறு	9	திங்கள்	9	செவ்வாய்	9	புதன்	9	வியாழன்
10	புதன்	10	வியாழன்	10	வெள்ளி	10	சனி	10	ஞாயிறு	10	திங்கள்	10	செவ்வாய்
11	திங்கள்	11	செவ்வாய்	11	புதன்	11	வியாழன்	11	வெள்ளி	11	சனி	11	ஞாயிறு
12	சனி	12	ஞாயிறு	12	திங்கள்	12	செவ்வாய்	12	புதன்	12	வியாழன்	12	வெள்ளி
13	வியாழன்	13	வெள்ளி	13	சனி	13	ஞாயிறு	13	திங்கள்	13	செவ்வாய்	13	புதன்
14	செவ்வாய்	14	புதன்	14	வியாழன்	14	வெள்ளி	14	சனி	14	ஞாயிறு	14	திங்கள்
15	ஞாயிறு	15	திங்கள்	15	செவ்வாய்	15	புதன்	15	வியாழன்	15	வெள்ளி	15	சனி
16	வெள்ளி	16	சனி	16	ஞாயிறு	16	திங்கள்	16	செவ்வாய்	16	புதன்	16	வியாழன்
17	புதன்	17	வியாழன்	17	வெள்ளி	17	சனி	17	ஞாயிறு	17	திங்கள்	17	செவ்வாய்
18	திங்கள்	18	செவ்வாய்	18	புதன்	18	வியாழன்	18	வெள்ளி	18	சனி	18	ஞாயிறு
19	சனி	19	ஞாயிறு	19	திங்கள்	19	செவ்வாய்	19	புதன்	19	வியாழன்	19	வெள்ளி
20	வியாழன்	20	வெள்ளி	20	சனி	20	ஞாயிறு	20	திங்கள்	20	செவ்வாய்	20	புதன்
21	செவ்வாய்	21	புதன்	21	வியாழன்	21	வெள்ளி	21	சனி	21	ஞாயிறு	21	திங்கள்
22	ஞாயிறு	22	திங்கள்	22	செவ்வாய்	22	புதன்	22	வியாழன்	22	வெள்ளி	22	சனி
23	வெள்ளி	23	சனி	23	ஞாயிறு	23	திங்கள்	23	செவ்வாய்	23	புதன்	23	வியாழன்
24	புதன்	24	வியாழன்	24	வெள்ளி	24	சனி	24	ஞாயிறு	24	திங்கள்	24	செவ்வாய்

இதன்படி பார்த்தால் முதல் நாளின் பெயர் 'ஞாயிறு' என எடுத்துக் கொள்வோம் இருபத்து நான்கு ஓரைகள் முடிந்து இருபத்து ஐந்தாவது ஓரையாக அதாவது அடுத்த சுற்றின் முதல் ஓரையாகத் திங்கள் வருகிறது

எனவே இரண்டாம் நாளின் பெயர் 'திங்கள்'. இத்திங்கள் முதல் ஓரையாகக் கொள்ளப்பட்டு மீண்டும் 24 ஓரைகளைக் கடந்தால் அடுத்து வரும் ஓரை ‘செவ்வாய்'.

இதுவே மூன்றாம் நாளின் பெயர். இச்செவ்வாயை முதல் ஓரையாகக் கொண்டு மீண்டும் இருபத்து நான்கு ஓரைகளைக் கடந்தால் அடுத்த ஓரையாக 'புதன்' வருகிறது.

எனவே நான்காம் நாளின் பெயர் 'புதன்'. இவ்வாறாக 'வியாழன்' ஐந்தாவது நாளாகவும், 'வெள்ளி' ஆறாவது நாளாகவும், 'சனி' ஏழாவது நாளாகவும் வருகிறது.



மீம்ஸ் வடிவில் சங்க இலக்கியம்




வே.பார்த்திபன்
ஆற்றுப்படை
திருச்சிராப்பள்ளி



"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்"

திருக்குறளின் சொற்சுருக்கத்தையும் பொருட்பெருக்கத்தையும் நோக்கின், ஒவ்வொரு குறளும், கடுகினும் மிக நுண்ணிய அணுவைத் துளையிட்டு அதில் எழுகடல் நீரையும் பாய்ச்சி, மேலும் அது அளவிற் குறுகும் வண்ணம் சற்றுத் தறித்து வைத்தாற் போன்றதாம்.

என திருக்குறளின் பெருமையை கூறுவார் ஔவையார். எவ்வுளவு பெரிய அரிய தத்துவங்களையும் இரு வரிகளில் செய்யுளில் அடக்கி இன்றைய மீம்ஸ் க்ரியேட்டர்களுக்கு முன்னோடியாய் திகழ்ந்தவர் நம் வள்ளுவர். அவரை அடியொற்றியே சங்ககால செய்யுள்களில் வரும் சில குறிப்பிட்ட பாடல்களை மீம்ஸ் வடிவில் வழங்கலாம் என்ற எனது ஒரு சிறு முயற்சியே இது.



விரக்தியடைந்த ஆடவன் காதலி வீட்டுமுன் சென்று "என்னம்மா இப்டி பன்றிங்களேமா" என சோமபானம் அருந்தி கலாட்டா செய்வதை திரைப்படங்களில் கண்டுள்ளோம். இதைப்போல காதலியால் கைவிடப்பட்டு கடைசியில் வேறுவழியின்றி அந்த காதலியை உட்சபட்சமாய் அவமானப்படுத்தப்படும் நிகழ்வு **"மடலேறும் நிலை"** என சங்க இலக்கியம் சுட்டுகிறது.

"வயங்கு வெயில் நெமியப்
பாஅய்மின்னுவசியு

மயங்குதுளி பொழிந்த பானாட் கங்குல்

ஆராக் காமம் ஆடுஉ நின் றலைப்ப

இறுவரை வீழ்நரின் நடுங்கி"

சங்ககால Soup boy

இரு பாலரும் காதலித்து அதன்பின் காதலி,காதலனை கைவிட்டால் அந்த ஆடவருக்கு *"Soup boy"* என தற்போதைய தலைமுறை பெயர் சூட்டியுள்ளதை பார்த்துள்ளோம்.

தன் காதல் கைகூடாத நிலையில் இறப்புக்கும் அஞ்சுவது இல்லை என்பதை அகநானூறு எடுத்துக் காட்டுகிறது. காதல் கைகூடாத நிலையில் மலையில் இருந்து விழுந்து உயிர்விடுதலும் நிகழும் என்பதை மேற்கண்ட அகப்பாடல் குறிக்கிறது.

மடல் என்பது பனைமட்டை, ஓலையைக் குறிக்கும். இவற்றைக்கொண்டு குதிரை மாதிரி ஒரு பதுமைகட்டி ஊரில் தெருவில் மன்றத்தில் நிறுத்தி அதன் மேலமர்ந்து காதலன் அணியக்கூடாத பூக்களை அணிந்து தன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய பெண் இவள்தான் என்று ஊரார்க்கு அறியச் செய்வான். அதனால் அக்குழுவினுள் நெருக்கடி ஏற்பட்டு அந்தப் பெண்ணை அவனுக்கு மணம் செய்து வைத்த வழக்கம் மிகவும் தொன்மையானது. தொல்காப்பியம் மடலேறுதல் துறையைப் பெருந்திணை என்ற ஒவ்வாக்காமத்தில் அடக்கித் தண்டித்தது. குறிஞ்சி, நெய்தல் திணைகளில் கைக்கிளைக் காமத்தில் வைத்துப் பாடப்பட்டது.

உயர்திணை ஊமன்

ஊமன் என்பது பொதுச் சொல்லாகச் சங்ககாலத்தில் இருந்தது. அச்சொல் அஃறிணையில் கோட்டான் என்னும் ஆந்தையில் ஒரு பிரிவினைக் குறிப்பதாகும். அது ஆந்தையைப் போன்று பெருங் குரலிட்டுக் கதறாது. மென்மையாக அடக்கிக் குரல் கொடுப்பதால் ***'குரால்'*** என்றும், ***'உம்'*** என்று ஓசை எழுப்புவதால் அதை ***'ஊமன்'*** என்றும் வழங்கினர். இன்றும் நம் ஊர்மக்களால் அது ***'ஊமக் கோட்டான்'*** என்றே வழங்கப்பெறுகிறது. அப்பறவை ஆந்தையைப்போல் இரவில் நடமாடும் இயல்புடையது.

இப்படிப்பட்ட குணமுடைய குராலாகிய ஊமன் ஒருநாள் இரவு எப்படியோ தவறி கிணற்றுள் விழுந்துவிட்டது. இதனை உயர்திணையாகிய 'மனித ஊமன்' பார்த்துவிட்டான். அது கிணற்றுக்குள் இருந்து வெளிவராமல் தவிப்பதைக் கண்ட அம்மனித ஊமன் அதன்மேல் இரக்கங் கொண்டான். அப்பறவையைக் காப்பாற்ற அவன் எண்ணினான். கிணற்றுக்குள் இறங்க அவன் அஞ்சியபடியால் யாரையேனும் கூப்பிட்டால் வருவார் என்று நினைத்தான். ஊமை என்பதால் குரல் கொடுக்க முடியவில்லை. கைகளின் மூலம் சைகை காட்டத்தான் முடியும். குரால் என்பதை ஆந்தையாகவும், பசுவாகவும் சிலர் எடுத்தாள்வர்



இந்த வகை கோட்டான்கள் அஃறிணை வகையை சேர்ந்தது. இதனைப்போலவே இயல்புடைய மனித கோட்டான்(உயர்திணை ஊமன்) பற்றியே கீழ்க்கண்ட பாடல் கூறுகிறது.

கிணற்றில் வீழ்ந்த குரால் படும் துன்பத்தை, இரவில் கண்ட, ஊமை அத்துயரத்தை வெளியிட முடியாமல் துன்புற்றது போல, எனக்காகத் தோழி படும் துன்பத்தைப் பார்த்து நான் மிகவும் வருந்துகிறேன். தோழியின் துயரத்தால் நான் பெற்ற துன்பம், பல கிளைவழிகளும் பல யா மரங்களும் உள்ள நீண்ட வழியில் சென்ற தலைவன் செய்த கொடுமையை நினைத்து நான் தூங்காமல் இருக்கும் துன்பத்தைக் காட்டிலும்,மிகுந்த துன்பமாக இருக்கின்றது. என தோழியின் ஆற்றாமையாய் இப்பாடல் செல்கிறது.

உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

உயர்திணைப் பெயரின் வகைகளாக, **"நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயர், வினைப்பெயர், உடைப்பெயர், பண்புகொள்பெயர், பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர், பல்லோர் குறித்த சினை நிலைப்பெயர், பல்லோர் குறித்த திணை நிலைப்பெயர், கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர், இன்றிவரென்னும் எண்ணியற்பெயர் எனப் பதினொரு வகைப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்" தொல்காப்பியர்.**

தோழி. செவி, மகடூஉ, நங்கை, தையல் என்னும் இவ்வைந்து பெயர்களும்; இவை போல்வன பிறவும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் என்பது நன்னூலார் கருத்தாகும். மேலும் பேதை, பெதும்பை, இருளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, என உயர்திணைப் பெண்பால் பெயர்கள் உண்டு.




மனிதர், தேவர், தவிர்த்து பிற இனங்களையும், உயிரற்ற பொருட்களையும் அஃறிணை என நம் இலக்கணம் கூறுகிறது.

இவற்றினை அது, இது, என்றே நாம் விளிக்கின்றோம். ஆனால் நம்மில் பலர் (நான் முன்னர் இவ்வாறு இருந்தேன் தற்போது இல்லை)சக உயர்திணை இனமான பெண் இனத்தினை அது,இது என அழைப்பதினை கண்ணார கண்டிருப்போம். நான் மதிக்கும் பல ஆளுமைகளே தம் வீட்டு பெண்களை அவ்வாறு அழைப்பதனை கண்டுள்ளேன்.

அஃறிணை பெயர் சுட்டுதலை விடுத்து,இயற்பெயரையோ அல்லது உயர்திணை பெயர்களை மட்டும் அழைப்பதை இனி வழமையாய் கொள்வோம்.

இளங்கோவடிகள் கூறும் அளவீடுகள்

சிலப்பதிகாரத்தில் மாதவி ஏழு ஆண்டுகள் பயின்று தன்னுடைய பன்னிரண்டாம் அகவையில் ஆடல்,பாடல் முதலான கலைகளை அரங்கேற்றினாள். அவள் அரங்கேற்றிய மேடையின் அமைப்பு எவ்வாறு இருந்ததென கூறும் இளங்கோவடிகள்,அன்றறைய கணித அளவீடுகளின் படி எவ்வாறு மேடை அமையப்பெற்றதெனவும் கீழ்க்கண்ட பாடலில் கூறுகிறார்.



மலைகளில் உயர்ந்து வளர்ந்த மூங்கிலின் ஒரு கணுவிற்கும் மற்றொரு கணுவிற்குமிடையே ஒரு சாண் நீளமுடைத்தாக வளர்ந்த பகுதியை எடுத்துச் சிற்ப நூற்களில் விதித்த முறைப்படி அரங்கம் அமைப்பதற்கு நிலம் அளக்கப்படும் கோலானது தலையாய வளர்ச்சியை உடையவன் கைப்பெருவிரல் இருபத்து நான்கு கொண்டது ஒரு கோலாக நறுக்கியெடுக்கப்படும். இக்கோலால் ஏழுகோல் அகலமும், எண்கோல் நீளமும் ஒரு கோல் உயரமும் உடையதாய், தூணின்மிசை வைத்த உத்தரப்பலகைக்கும் அரங்கினது அகலத்திற்கு இட்ட பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இதற்குப்பொருந்த அமைந்த இரண்டு வாயில்களுடன் செய்யப்பட்டுள்ளது.

இவற்றின் அளவீடுகளை காண்போம்..

இதில் கூறப்பட்டுள்ள ஒரு **சாண் என்றால் அது அங்குலம் எட்டேகால் அங்குலமாகும்.**

ஒருவிரல் - ஒன்றேமுக்கால் அங்குலம்

மூங்கிலின் ஒரு கணுவிற்கும் மற்றொரு கணுவிற்கும் இடையே அமைந்த தூரம் எட்டேகால் அங்குலமாகும்.

ஒரு கோல் = 24 விரல் அளவு - 33 அங்குலம்

*அகலம் 7 கோல் = 33 * 7 = 231 அங்குலம்*

*நீளம் 8 கோல் = 33 * 8 = 264 அங்குலம்*

*உயரம் 1 கோல் = 33 * 1 = 33 அங்குலம்*

*உத்தரப்பலகைக்கும் அகலத்திற்கு இட்ட பலகைக்கும் =33*4 = 132*

இடைநின்றநிலம் 4 கோல்


விரல், சாண், கோல் போன்ற நீட்டலளவைப் பெயர்களைச் சிற்பநூலோர் பயன்படுத்திய திறனைச் சிலப்பதிகாரம் வழியாக உணர முடிகிறது.

பொறுப்பு நிறைந்த ஆண்யானை

நற்றிணையின் 399ம் பாடல், ஒரு ஆண்யானை எவ்வாறு மகவுற்ற தன் இணையினையும்,தன் பிள்ளையையும் எவ்வாறு மகப்பேறு காலத்தில் பேணி காத்தது,என எடுத்துரைக்கிறது. இன்று Operation தியேட்டரில் தனது முதல் வாரிசை எதிர்நோக்கி காத்திருக்கும் ஆணின் நிலைக்கு இணையானது இக்களிற்றின் நிலை.இதனை அழகாய் காட்டியுள்ளார் இச்செய்யுளின் ஆசிரியர்.

காதல் வாழ்வு மேற்கொண்டிருந்தன இரு யானைகள். அவற்றுள் பெண்யானை கருவுற்றது, அஃதறிந்து மகிழ்ந்தது ஆண் களிறு. தனது இணை விரும்பி உண்ணும் உணவுப் பொருள்களைத் தேடிக் கொணர்ந்து தந்தது ஆண் யானை. பிடியுற்ற கருவு அந்த யானையின் முதற் கருவாதலின், அது கேடின்றிக் கருவுயிர்த்தல் வேண்டுமே எனும் கவலை எழவே, களிறு உள்ளூர வருந்திற்று.

கருவுயிர்த்தற்கு ஏற்ற இடத்தைத் தேடிக்காணும் கவலை, அக்களிற்றிற்கு ஏற்பட்டது.அந்த இடம் நீரும் நிழலும் வாய்ந்த இடமாதல் வேண்டும்,அவை இருந்தால் மட்டும் போதாது. கன்றின்று கிடக்கும் தம் இணை பகை விலங்குகளால் கேடு நேராவண்ணமும்,அது ஈனும் கன்றையும் தன் கண்ணெதிரில் வைத்துக் காத்தல் வேண்டும், அதற்கு அவ்விடம் ஒளி மிக்கிருத்தல் இன்றியமையாததாம் என்றெல்லாம் ஆண்களிறு எண்ணிற்று.




அம்மலைச் சாரலில் ஓர் இடம் கிடைத்தது. அருகே, நீர் இடையறாது ஒலித்து ஓடும் அருவி, நீண்டு வளர்ந்த மூங்கில்களால் நிழல் பொருந்திய அருவிக்கரை, மண்ணுக்கடியில் கிடந்த மாணிக்கக் கற்கள், புழுதியைக் கிளறும் பன்றிகளின் செயலால்,

வெளிப்போந்து வீசும் ஒளி, இத்தகைய இடத்தைத் தேடிக்கண்டது களிறு.உடனே சூலுற்ற தன் இணையை ஆங்கு அழைத்துச் சென்றது.அங்கே கன்றை ஈன்றது பெண்களிறு.அப்போது தனது இணையின் உடல் நோவையும் போக்குதல் வேண்டும்,கன்றின் பசிபோக்கும் பால் பெருக வழிச் செய்தலும் வேண்டும் என விரும்பிற்று களிறு. இவ்விருவகைப் பயனையும் ஒருங்கே தரவல்லது தினையுணவே என உணர்ந்தது. உடனே விரைந்தோடிச் சென்று, மலையை அடுத்துள்ள வனத்தில் புகுந்து, ஆங்கு விளைந்து முற்றித் தலை சாய்த்துக் கிடக்கும் தினைக்கதிர்களைக் கவர்ந்து கொணர்ந்தது.தன் இணையின் வாயில் தந்து போன்பு காட்டி உண்பித்தது பொறுப்பு நிறைந்த அந்த ஆண்களிறு.

இல்உறைதெய்வம்:

திருமணத்துக்காக இல்லுறை தெய்வங்களான நம் குலதெய்வங்களிடம் வேண்டுவதும், உயிர்பலி கொடுப்பதும், திருமண நாளில் அவர்களுக்கு சிறப்பு செய்வதும், முற்காலத்திலிருந்து தற்காலம் வரை கடைப்பிடிக்கும் பழக்கம்.

யானையுடன் போரிட்டு வென்று அதன் தந்தம் பறிக்கும் வீர வேட்டுவனைக் காதலித்தாள் தலைவி. தந்தையும் தாயும் அவள் காதலை மதித்து ,அவனையே அவள் கணவனாய் அடைய சம்மதித்தனர், மணநாளும் குறிக்கப்பட்டது. அந்த நாள் வரத்தான் போகிறதென்றாலும், அது விரைந்து வரவேண்டுமென்ற தவிப்பு தலைவிக்கு. தலைவியின் மனமறிந்த தோழி, அவள் தவிப்பு நீக்கக் கருதியவளாய், 'நம் வீட்டில் உறையும் தெய்வத்தை மெல்லிய விரல்களைக் குவித்து வணங்கிப் பலிசெலுத்தி, மணநாள் விரைந்து வருமாறு வேண்டுவோம் வா' என்று வழிகாட்டினாள்.



இதனை கீழ்க்கண்ட அகநானூற்று பாடல் கூறுகிறது,

"பெரு மலைச் சிலம்பின் வேட்டம் போகிய

செறி மடை அம்பின் வல் வில் கானவன்

பொருது தொலை யானை வெண்கோடு கொண்டு

நீர் திகழ் சிலம்பின் நன் பொன் அகழ்வோன்

கண் பொருது இமைக்கும் திண் மணி கிளர்ப்ப

வைந் நுதி வால் மருப்பு ஒடிய உக்க

தெண் நீர் ஆலி கடுக்கும் முத்தமொடு

மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு

சாந்தம் பொறை மரம் ஆக நறைநார்

வேங்கைக் கண்ணியன் இழி தரும் நாடற்கு

இன் தீம் பலவின் ஏர் கெழு செல்வத்து

எந்தையும் எதிர்ந்தனன் கொடையே அலர் வாய்

அம்பல் ஊரும் அவனொடு மொழியும்

சாய் இறைத் திரண்ட தோள் பாராட்டி

யாயும் அவனே என்னும் யாமும்


வல்லே வருக வரைந்த நாள் என


நல் இறை மெல் விரல் கூப்பி

இல் உறை கடவுட்கு ஒக்குதும் பலியே"

பழங்கால தமிழகமும் சர்வதேச வர்த்தகமும்

பகுதி-2






பாலாஜி கிருஷ்ணமூர்த்தி
இயந்திரவியல் பொறியாளர்
கும்பகோணம்


சென்ற பகுதியில் எர்மோபோலன் *(Hermopollen)* என்ற வணிகக் கப்பல் ஏற்றிச்சென்ற பொருட்களுக்கான வணிக ஒப்பந்தம் குறித்து பார்த்தோம். இந்த பகுதியில் வணிகம் நடந்த வழித்தடங்கள் குறித்து பார்ப்போம். படம் 1-ல் இருப்பவை அக்காலத்தில் இருந்த தரைவழி மற்றும் கடல்வழி வணிகப்பாதைகள். சிகப்பு நிறத்தில் இருப்பது சீனாவின் பட்டுப் பாதை. நீல நிறத்தில் இருப்பது நம் பண்டைய தமிழகம் வழியே நடந்த வணிகத்திற்கான பாதை. கீழைக் கடற்கரையில், காவிரிப்பூம்பட்டினம் மற்றும் அரிக்கமேடு துறைமுகங்களில் இறக்கப்படும் பொருட்கள் தரை வழியாக வர்த்தக பாதைகளின் வழியே கொண்டு செல்லப்பட்டு மேலைக் கடற்கரையில் இருந்த முசிறி துறை வழியாக கப்பல்களில் ஏற்றப்படும். பெரும்பாலான ரோமானிய கப்பல்கள் செப்டம்பர் மாதம் வாக்கில் முசிறியில் நங்கூரமிட்டு பின்பு ஜனவரி மாதத்தில் மீண்டும் ரோம் நோக்கி பயணப்பட்டிருக்கின்றன. அப்படி செல்லும் கப்பல்கள் அரபிக்கடல் தாண்டி, செங்கடல் உட்புகுந்து பெரினைஸ் என இன்று வழங்கப்படும், ரோமானிய வரைபடத்தில் பெர்னைக்கி என்று குறிப்பிடப்பட்டுள்ள துறையில் சென்று சேர்ந்திருக்கின்றன. பின்பு தரைவழியே கோப்டோஸ் பாலைவனத்தை கடந்து, இன்றைக்கு குவிப்ட் எனப்படும் நகரை அடைந்து பின்பு அங்கிருந்து நைல் நதியில் பயணமாகி அலெக்சாந்திரியா துறைமுகத்தை அடைந்து, பின்னர்



அங்கிருந்து கிரேக்கத்திற்கோ, ரோம் நகருக்கோ எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இதுதான் பயணவழி. பார்க்க படம் -2.

தங்களின் கடல்வழி வணிகத்திற்கு ரோமானியர்கள் பியுடென்கெரியானா *(Tabula peutingeriana)* என்றழைக்கப்படும் சுமார் 20-25 அடி நீளமுள்ள வரைபடம் ஒன்றை பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அதில் முசிறி என்பது முசிறிஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பார்க்க படம் -3 மற்றும் 4. இப்படியாக சுமார் பொயு 4-5ஆம் நூற்றாண்டு வரை உலகத்தின் வர்த்தகத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்திருந்த முசிறி





திடீரென உலக வரைபடத்தில் இருந்து மறைந்து போனது. காரணங்கள் பல உண்டு. அவற்றில் முக்கிய காரணங்கள் இரண்டு. முதலாவது, செழிப்பான முசிறி துறையை சுற்றி கடற்கொள்ளையர்கள் நடமாட்டம் எப்போதும் அதிகமாகவே இருந்தது. செழிப்பான வர்க்கம் எனில், முசிறியுடனான ரோமானிய பேரரசின் வர்த்தக பற்றாக்குறை(பொயு 1-4 ஆம் நூற்றாண்டுகளில்) மட்டுமே 5,00,000 பவுன் தங்கம் என்கிறது ஒரு ரோமானியக் குறிப்பு. எனவே அவ்வளவு மதிப்பிலான வணிகத்தை கடற்கொள்ளையர்கள் வசமிருந்து காத்துக்கொள்ள வேறு துறைகள் நோக்கி ரோமானிய கப்பல்கள் செல்லத்துவங்கின. மேலும் வரைபடங்கள் மேன்மேலும் செறிவூட்டடப்பட்டு காவிரிப்பூம்பட்டினத்திற்கு நேராக கப்பல்கள் வரத்துவங்கின.

இரண்டாம் காரணம்! பொயு 3-4 ஆம் நூற்றாண்டுகளில் ரோமானிய பேரரசின் வீழ்ச்சி மற்றும் அரசியல் நிலையின்மை காரணங்களால் வர்த்தகமும் குறையத் துவங்கியது.

வர்த்தகம் மங்கினாலும் ஊர் இருக்கத்தானே வேண்டும். எங்கே முசிறி?

எங்கே முசிறி என்று தேடுவதற்கு முன், சங்ககால மூவேந்தர்கள் ஆண்ட நாட்டின் எல்லைகளை ஒருவாறு கணிக்க முயல்வோம்.

சங்ககால மூவேந்தர் ஆண்ட நிலப்பரப்பினை நம் சங்க இலக்கியங்கள் சொல்கின்றன.

பாண்டிய நாடு ஐம்பத்தாறு காதமும், சோழநாடு இருபத்துநான்கு காதமும், சேரநாடு எண்பது காதமும் பரப்பினைக் கொண்டிருந்தன.

சேர நாட்டின் எல்லைகளை பழந்தமிழ்ப் பாட்டொன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

வடக்குத் திசைபூமி வான்கீழ்தென் காசி குடக்குத் திசை கோழிக் கோடாம் - கடற்கரையின் ஒரமே தெற்காகும் உள்ளெண் பதின் காதம் சேரநாட் டெல்லையெனச் செப்பு. (பாடல் இயற்றியது யார் என கிடைக்கவில்லை).

ஆக முசிறி சேரநாட்டினுள் இருந்தது என்பது தெளிவாகிறது.

சேரன் செங்குட்டுவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகன்(ஔவை. துரைசாமி அவர்களின் கருத்து). இவன் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட ஒரு புறநானூறுப் பாடல் முசிறியைப்பற்றி சொல்கிறது.

கழித்தோணியாற் கரைசேர்க்குந்து;

மலைத்தாரமும் கடல்தாரமும்

தலைப்பெய்து வருநர்க்கீயும்

புனலங்கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்

முழங்குகடல் முழவின் முசிறி யன்ன.

– (புறம் 343-6~10)

மரக்கலங்களில் கொண்டுவந்த பொன்னாலான பொருட்கள் கழிகளில் இயங்கும் தோணிகளால் கரை சேர்க்கப்படும். பொன்னாலான மாலை அணிந்த (செங்)குட்டுவனுடைய நாட்டில் தண்ணீரைப்போல் கள் மிகுதியாக உள்ளது. அவன் கடலில் உள்ள பொருட்களையும் மலையில் உள்ள பொருட்களையும் கலந்து வந்தோர்க்கெல்லாம் அளிப்பவன். அவன் நாட்டில் கடல்போல் முழங்கும் முரசை உடைய முசிறி என்னும் ஊர் உள்ளது




சேரநாட்டின் தலைநகர் எது என்று இன்றைய தலைமுறையிடம் கேட்டால், உடனே வஞ்சி என்று பதில் வரும். உண்மை என்னவெனில் கரூரும் (வஞ்சி) தலைநகராக இருந்திருக்கலாம். ஆனால் சேரநாட்டின் உண்மை தலைநகர் திருவஞ்சிக்களம்! குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர். வைதீகம் வைணவம் கலப்பில் உருவான ஒரு கூற்று இன்று கரூரையும் திருவஞ்சிக்களத்தையும் ஒன்றாக்கி விட்டது என்றே எண்ணுகிறேன். அதனால் என்னவாயிற்று? சேரன் ஆண்ட நிலப்பரப்பு இன்றைய தமிழகத்திற்குள்ளேயே அடங்கிபோகிறது.

வரலாற்று அரசியலின் முதற் புள்ளி இப்படித்தான் துவங்குகிறது. (பார்க்க குலசேகர ஆழ்வார் -விக்கிபீடியா பக்கங்கள்).

சேரனின் தலைநகர் திருவஞ்சிக்களம் இன்றைய கோழிக்கோடு அருகே இன்றும் உள்ளது. இந்த திருவஞ்சிக்களம் இருப்பது பெரியாறு ஆற்றங்கரையில்! இந்த பெரியாறு நம் ஐங்குறுநூறு மற்றும் அகநானூறு இரண்டிலும் சுருளியாறு என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆற்றின் கரையில் தான் முசிறியும் இருந்திருக்கிறது. அகநானூறு முசிறி பட்டணத்தை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

வாரேன்வாழி ,என் நெஞ்சே ! சேரலர்
சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியடு பெயரும்
வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ"-
(அகம் 149 -7~11)

பொதுக்கருத்து கொள்வது போல முசிறி ஒரு கடற்கரை நகரல்ல. கடற்கரையில் இருந்து பெரியாறு வழியே உள் நுழைந்து வந்தால் முசிறி என்னும் நகர் வரும் என்கின்றன ரோமானியக் குறிப்புகள். மேலைக் கடலில் கப்பல்களை நிறுத்திவிட்டு, அங்கிருந்து சிறு படகுகள் மூலம் வர்த்தக பொருட்கள் முசிறிக்கு கொண்டுவரப்பட்டன/ எடுத்துச்செல்லப்பட்டன.



பொயு 5 ம் நூற்றாண்டில் வர்த்தகம் ஒழிந்து போனாலும் பொயு 13 நூற்றாண்டுவரை முசிறி நம் உள்நாட்டு குறிப்புகளில் இருக்கிறது. 1342ல் மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஒன்று இந்த பெரியாற்றில் ஏற்பட்டதாக குறிப்புகள் உண்டு. அக்காலகட்டத்தில் அந்த பகுதியில் பயணம் மேற்கொண்டிருந்த இபின் பட்டுடா என்ற மொராக்கோ நாட்டு பயணி அப்பகுதிகளை தவிர்த்துவிட்டு பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

இதன் மூலம் பெரியாற்றில் ஏற்பட்ட வெள்ளம் முசிறியை சூழ்ந்து மணலில் புதைத்திருக்கலாம் என்ற கோட்பாடு வலு பெறுகிறது. எனினும் முசிறி எப்படி மறைந்தது என்பதற்கான அறுதியிட்டு சொல்லக்கூடிய தகவல்கள் இல்லை..

கோயிற் கட்டிடக்கலை

பாகம்-5



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை



பாகம் ஐந்து:

விமான வடிவம் மீள்பார்வை :

சென்ற பாகத்தில் விமான ஆறு வகை வடிவம் (ஆகிருதி) அறிந்தோம்

1.சதுரம் (சதுரம்)

2.வட்டம் (விருத்தம்)

3.நீண்ட சதுரம் (ஆயத சதுரம்)

4.நீண்ட வட்டம் (ஆயத விருத்தம்)

5.ஆறுவட்டம் (ஷடாச்சரம்)

6.எட்டுப்பட்டம் (அஷ்டாங்கம்)

இதர விமான வகைகள்

7. விந்தியா வட்டம்

விமானத்தின் இரு பக்கமும் இணைகோடுடன் இரு அரைவட்டகளால் இனைந்திருப்பதும் , செவ்வக தளத்தின் மேல் நீள்சதுர தளம் மற்றும் நீள்சதுர சிகரம் அமைக்கப்படும் விமானத்தை விந்தியா வட்டம் அல்லது துவயசஸ்ர விருத்தம் என்ற அழைக்கப்படுகின்றன.





Figure:6-விந்தியா வட்டம்

Figure:7-எருக்கம்பட்டு அரங்கநாதர் கோயில்



8. கஜபிருஷ்ட விமானம்

கஜ பிருஷ்டம் என்பது யானையின் பின்பகுதி என அர்த்தம். கஜ பிருஷ்ட விமானத்தின் பின்புறம் யானையின் பின்புற (பிருஷ்டபாகத்தை) குறிப்பதாகும்



Hasti Prishta






Figure 7 கஜபிருஷ்ட விமானம்

Figure 8 கஜபிருஷ்ட விமானம் வரைப்படம்







Figure 8 & 9 மல்லை- சஹாதேவ இரதம்

9. அஷ்டாகார விமானம்

இந்த விமான வகையை அஷ்டாகார விமானம் என்று அழைக்கப்படுகின்றது

பிளஸ் (Plus) வடிவத்தில் அமைய பெரும் விமானம்.






Figure 10 அஷ்டாகார

Figure 11 பனமலை தாளகிரீசுவரர் ஆலயம்





Figure 12 பனமலை தாளகிரீசுவரர் ஆலயம்
Figure 13 திருவாரூர் ஆழி தேர்

10. சபாகார விமானம்

சபாகாரம் என்பது,ஆயத நாகர விமானத்தின் சிகரம் கூரை வடிவில் இருப்பது. கல், மரம், செங்கல் எதையும் பயன்படுத்தி அமைக்கலாம்.



Figure 14 தில்லை சிற்றம்பலம்

சிதம்பரம் நடராஜர் சபை, சபாகார விமானத்திற்கு நல்ல எடுத்துக் காட்டு. மிகப் பழமையானதாகவும் கருதப் படுகிறது. இதில் கல்காரப் பகுதி கற்களாலும் மேல் பகுதி மரத்தாலும் செய்ப்பபட்டு தங்கத் தகடுகளால் கூரை வேயப்பட்டுள்ளது.

கோயில் கட்டிடக் கலைக்கான வாஸ்து முறை-

பிரசாத வாஸ்து எனப் படுகிறது. இதில் பல்வேறு வழிமுறைகள் ஆலய நிர்மாணத்தில் கைக்கொள்ளப் படுகின்றன

1. அளவு முறை
2. திசை அறிதல்(சங்கு ஸ்தாபனம்)
3. ஆயாதி கணிதம்
4. வாஸ்து
5. பதவின்யாசம்
6. மனைத் தேர்வு
7. பிரமேஷ்டிகா ஸ்தாபனம்
8. கருவறை பதவின்யாசம்
9. பிரகார லட்சணம்

கதை கூறும் கல்வெட்டுகள்....!



நா. நாராயண மூர்த்தி,
உதவிப் பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கீரனூர்,
புதுக்கோட்டை மாவட்டம்.





கண் நிறைந்த பெருமாள் யார்???

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, மலையடிபட்டி கிராமம் தொன்மையான வரலாற்று சிறப்பு மிக்கது. நீத்தார் நினைவு சின்னங்கள், பாறை ஓவியங்கள் என வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மனித செயல்பாடுகளை கொண்டுள்ளது இந்த கிராமம்.

சைவம் மற்றும் வைணவத்திற்கென குடைவரைக் கோயில்கள், சமணத்திற்கென படுக்கைகள் என அனைத்து சமயத்தையும் அரவணைத்த மலையடிபட்டி, குன்றை திருவாலத்தூர் மலை என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. (P.S.I - 18)

இம்மலையில் பள்ளி கொண்டுள்ள குடைவரை பெருமாள், கண் நிறைந்த பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். வேண்டிக் கொள்பவர்களுக்கு கண்பார்வை தருபவர், கண் சம்பந்தமான நோய்களை தீர்த்து வைப்பவர், ஆகவே இந்த பெருமாளுக்கு கண் நிறைந்த பெருமாள் என்று பெயர் என பெருமாளின் பெயர் குறித்து செவிவழிக் கதை வழக்கங்கள் இங்கு நம்பப்படுகிறது.

*இந்த குடைவரைக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில், தஞ்சாவூர் நாயக்க மன்னரான அச்சுதப்ப நாயக்க சமந்தனாரின் தான கல்வெட்டு, (*P.S.I - 912) மூலவரை கண் நிறைந்த பெருமாள் என்று குறிப்பிடுகிறது.*

கண்பார்வை அளித்த கதை குறித்து ஒரு சுவாரஸ்யமான கல்வெட்டு ஒன்று இந்த மலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த கல்வெட்டு பெருமாள் கோவில் குடைவரையில் பொறிக்கப்படவில்லை. மாறாக அது கிழக்கு புறத்தில் உள்ள சிவன் கோயில் குடைவரையில் பொறிக்கப்பட்டுள்ளது.

வாகீஸ்வரமுடைய நாயனார் என அழைக்கப்படும் இந்த குடவரை ஈசன் சன்னதியானது தந்திவர்ம பல்லவர் காலத்தில் (கி.பி எட்டாம் நூற்றாண்டின் இறுதியில்) குவாவன் சாத்தன் என்னும் இரண்டாம் விடேல்விடுகு முத்தரைய


*சிற்றரசரால் உருவாக்கபட்டதாகும் (P.S.I - 18) ஈசன் சன்னதியின் வடக்குப் புற சுவரில் 47 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள அந்த கல்வெட்டு (*P.S.I - 904) கூறும் கதை இதுவே,*

பூச்சிக்குடி (இன்று மலையடிப்பட்டிக்கு தென் கிழக்கில் உள்ள பூச்செடி வயல்) என்ற ஊரை சேர்ந்த ஆவுடையாதேவர் என்பவர் துவாக்குடி அருகில் உள்ள திருநெடுங்குளம் என்னும் ஊரில் உள்ள தேவரடியாள் வீட்டுக்கு செல்கிறார். அங்கு அந்த பெண் மறுபடியும் ஒரு பிராமணனுடன் இருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்த ஆவுடையாதேவர், அந்த இருவரையும் வெட்டிக் கொன்றுவிட்டு இந்த மலையடிவாரத்திற்கு வந்துவிடுகிறார்.

இங்கு வந்த இடத்தில் அவருக்கு இரண்டு கண்களும் தெரியாமல் போகிறது. கொலைப் பாவத்திற்கு தண்டனையாக கண்பார்வையை இழந்ததாக கருதும் ஆவுடையாதேவர், இந்த பாவம் நீங்க வாகீஸ்வர சுவாமி என்றழைக்கப்படும் சிவபெருமானுக்கு தன் நிலங்களை தானமாக தருவதாக வேண்டிக் கொள்கிறார்.



வேண்டிக் கொண்டபடி அவருக்கு கண்பார்வை திரும்பவே, இந்த குடைவரை சிவன் கோவிலுக்கு, ஆவுடையான் குடிகாடு என்னும் தன் நிலத்தை தானமாக தருகிறார். மேலும் இந்த தானத்திற்கு தீங்கு விளைவிப்பவர்கள், இந்த வாகீஸ்வர சுவாமி என்னும் குடைவரைச் சிவன் சன்னதிக்கு, துரோகியாக போவார்கள் எனவும், கங்கைக் கரையில் காரம்பசுவை கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள் எனவும் தன் கல்வெட்டில் குறிப்பிடுகிறார்.



596

26 டு எனக்கு கண் தெ-
27 தரிஞ்சபடியினா-
28 லெ என்னுடை-
29 ய காணியாந
30 ஆவுடையான்[1] குடி[க்*][கா]-
31 டு னாங்[கெ]ல்லை உள்-
32 பட்ட நிலமும் கல்ப்பெ-
33 பாட்டு குடு[த்*]தென் [||*] இந்-
34 நிலம் ஸ்வாமி ஸந்நி-
35 இ ஸிலாசாதனமும்
36 எழுதி குடுத்தென் [||*] இ-
37 ந்த நிலத்தில்[2] பா-
38 தாமொருவன் பெச-
39 கு பண்ணினால் வா-
40 கீஸ்வரஸ்வாமி ச-
41 ன்னதி தொ-
42 ரோகியாக போ-
43 வன் [|*] கெங்கைக்-
44 கரையில் காரா-
45 ம்பசுவை கொண்-
46 ண தொஷத்திலெ
47 போவன் உ

தன்னுடைய வாழ்க்கை நிகழ்வை சம்பந்தப்பட்டவர் நேரடியாக கூறுவது போல அமைந்துள்ள இந்த கல்வெட்டினை எழுத்தமைதியை கொண்டு பார்க்கும்போது, மிகவும் பிற்காலத்திய நாயக்கர் ஆட்சி கால கல்வெட்டு போல் உள்ளது.

மேலும் இந்த கல்வெட்டானது, வெகுதான்ய வருடம் தை மாதம் பதினொன்றாம் நாளில் பொறிக்கப்பட்டதாக, கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த தானமானது வாகீஸ்வர சுவாமி மற்றும் வடிவுள்ளமங்கை தாயார் இருவருக்கும் என இந்த கல்வெட்டு தொடங்குகிறது.



இந்த கல்வெட்டுபடி பூச்சிக்குடி ஆவுடையாதேவருக்கு, கண்பார்வையை திருப்பி தந்தவர் குடைவரை ஈசன் எனில், கண் நிறைந்த பெருமாள் சிவனா? திருமாலா?? என்பது குறித்து கருத்துக்கள், யூகங்கள், வழக்குமரபுகள் வரவேற்கப்படுகின்றன.


பார்வை தந்த இறைவன் எவராக இருந்தாலும், ஆவுடையாதேவன் மலையடிப்பட்டியில் இழந்த பார்வையை மீண்டும் பெற்றார் என்பதே கல்வெட்டு கூறும் நிதர்சனம்.

கதைகள் தொடரும்.

அன்புடன்

நா.நாராயணமூர்த்தி.

*(*P.S.I - Inscription (Texts) of Pudukkottai State)*



சபதமிட்டு இறந்த மழபட்டியான்



A.T.மோகன்
தொன்ம ஆவணவியலாளர்
சேலம்



திருவள்ளூர் மாவட்டம், பள்ளிபட்டு தாலுக்கா, சொரக்காபேட் பகுதியில் கீழபூடி கிராமம் கொசத்தலை ஆற்றின் கரையோரமாக , நலபுரி அம்மன் கோயில் எதிரே உள்ள கிணற்றின் அருகில் சிதிலமடைந்த பழைய செங்கல் கோயிலின் முன்பாக தரையில் உள்ளது இந்நடுகல்.

இது பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல் என மதிப்பிடப்படுகிறது.

நடுகல்லில் வீரன் பத்மாசன கோலத்தில் அமர்ந்து இருக்க காதில் குண்டலம், கழுத்தில் மணியாரம், தலையில் சடாமுடி ,கையில் காப்பு எனவும் ,விலாவின் இடதுபுறம் ஈட்டி இருக்க , ஒரு கால் கனுகாலுடன் வெட்டப்பட்டு வலது கையில் இருக்க, கால் தடை அருகில் ஒரு கால், கை வெட்டப்பட்டு இருக்க ,மிகவும் அச்சமூட்ட கூடிய வகையில் உள்ளார்.

மாவலி வாணரையர் ஆட்சியில் அதியனார் அடிகன் தந்தியரையன் உயிர்நீத்த ஓராண்டில் தன்னுயிர் மாய்ப்பேன் என சபதமிட்டு மழபட்டியன் இறந்தான் அவனுக்கு உதிரபட்டி நிலம் கொடுக்கப்பட்ட விவரங்கள் கல்வெட்டில் காணப்பட்டது.

கல்வெட்டு வாசகங்கள்..

ஸ்வஸ்திசிரி மாவலி வானராயர்

மகன் விஞ்சர வாணராய பிரிதி ராச்சம் செலா

ல் நின்ற காலத்து அய்யம்பதாவதில் அழிய

ரை யரடிகள் தந்தியறைன்க்கு வேள பூண்

ட ஓராட்டை நாளிற் சாவேனென்று செத்தான் மழ

பட்டியன் மேற்க்கே கிடந்த பட்டி குடுத்தேனி

ன்றி செய் புக்கார் கட்டி புக்கார் எப்பேர்ப

ட்ட பிழை செய்தாலும் கொல்லாத தாசரு கயி

அணியா

ற்றிலுவே

னாள நிச்

சாதாரே

இது கே

ட்

இவரை

ரசரு

மகன்

நம்பி

மூவ

___

லங்கு

றைச்சி

த்திய


ம்புக்

கார்

என 25 வரி கல்வெட்டுடன் காணப்படுகிறது.

செப்பேடுகள் வழி சோழர் வரலாறு

பாகம்-5




சென்னை அருங்காட்சியகச் செப்பேடு

முகப்பு இலச்சினை



மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுசங்கம்
காரைக்கால்



செப்பேடுகள் வழி சோழர் வரலாறு

பாகம்-5

உத்தமச்சோழன்.

16 ஆம் ஆட்சியாண்டு.

கி.பி.986.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 3ல் எண் 128ல் இச்செப்பேடுப் பற்றிய விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்செப்பேடு யாரிடமிருந்து எவ்வாறு கிடைத்தது என்ற விபரத்தை அறியமுடியவில்லை என்று இச்செப்பேட்டை பதிப்பித்த H.கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் குறிப்பிடுகிறிர்.

தற்போது இச்செப்பேடு சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

மொத்தம் 5 பட்டைகள் ஒரு வளையத்தில் கோர்க்கப்பட்டு முகப்பு இலச்சினை உள்ளது.




உத்தமச்சோழனின் 16வது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 986

முகப்பு இலச்சினையில் வழக்கமான சோழ முத்திரையே உள்ளது. ஒரு புலி, இரண்டு மீன், படுக்கைவசமாய் வில், இரண்டு விளக்குத் தூண்கள், ஒரு குடை, இரண்டு சாமரங்கள் காணப்படுகிறது.

சாசன சுலோகம் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ளது.

"ந்யாயனாம் ஸாஸனம் குர்வத் ஸாஸனம் சக்ரபூப்ருதாத ஸாஸனம் பரகேசரி வர்ம்மண."

நியாயங்களை நெறிபடுத்தும் ஆணைச்சக்கரத்துள் அடங்கிய அரசர்களுக்கு ஆணையான இது பரகேசரிவர்மனின் சாசனம் என்று பொருள்.



காஞ்சிபுரம் ஊரகத்துதேவர் கோவிலில் நிவந்தங்களை சரிசெய்யவும் புதிய நிவந்தங்கள் தரவும் அரசனால் இடப்பட்ட ஆணையே இச்செப்பேடு..

வடமொழிப்பகுதியின் உரைநடை நான்கு செய்யுள்கள் அதன்பிறகு தமிழ்ப்பகுதி இவ்வாறு சாசனங்கள் அமைந்துள்ளன. இச்செப்பேட்டுத் தொகுதியில் மேலும் சில ஏடுகள் கிடைக்காமல் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வடமொழிப்பகுதியில் உள்ள நான்கு செய்யுட்களின் சுருக்கம்..

அவனும் அந்த இருமரபு வழி சேர்ந்த பட்டசாலிகளுக்கும், கருவுளான்படி, கம்சாகப்படி, அதிமானப்பாடி, ஏற்றுவழிச்சேரி என்ற சிற்றூர்களிலும் இருநூறு பொன்களைக் கொடுத்தான். அதிமானபாடி, கருவுளான்பாடி சிற்றூர்களில் பிறந்த நெசவாளர்களை பெருமாளுக்காக தராசு மற்றும் நாழியில் பெற்ற தங்கத்தின் வட்டியாகப் பெற்ற பணத்தின் வரவு செலவுகளை நிர்வாகம் செய்யும் ஸ்ரீகார்யமாக நியமித்தான்.

ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பம் இருநாழி அரசியும் ஒரு நாழி எண்ணையும் சோழ நியமத்தில் இருப்பவர்களால் ஊரகத்திலிருக்கும் மூவுலகுடையார்க்கு வழங்கவேண்டும். அவ்வாறு வழங்குவதால் அரசுக்குரிய வரியை செலுத்த வேண்டாம் என்று மதுரையை சீர்குலைத்த சோழன் ஆணையிட்டான். இவ்வாணையை நகரமக்கள் ஒப்புக்கொண்டனர்.

ஊரகத்தில் இருக்கும் பெருமாளின் ஸ்ரீகார்யம் பார்ப்பவர்களோடு சோழர்நியமத்தில் வசிக்கும் குடும்பத்தலைவர்களால் எழுதப்பட்ட வரவுசெலவுகளை அரசனுக்குரிய துணியை நெய்யும் அந்த நான்கு ஊரைச்சேர்ந்தவர்களுக்கு காட்டவேண்டும்..

தமிழ்ப்பகுதியில்..

பரகேசரிவர்மரான உத்தமச்சோழனின் 16ஆம் ஆட்சியாண்டில் இவ்வாணை வெளியிடப்படுகிறது. காஞ்சியிலுள்ள தனது அரண்மனையில் சித்திரக்கூடத்தில் எழுந்தருளியபோது இவ்வாணையை உத்தமச்சோழன் பிறப்பிக்கிறார். இவ்வாணைக்கான விண்ணப்பம் செய்தவர் உத்தமச்சோழனின் அதிகாரி மூவேந்த வேளான் நக்கன் கணிச்சன்



என்பவன்.

காஞ்சிபுரம் ஊரகத்து பெருமாளுக்கு வருமானமான, கோல்நிறைக்கூலி (தராசால் நிறுக்கப்படும் பொருட்களுக்கான வரி) காலளவுக்கூலி (அளந்து விற்கப்படும் பொருட்களுக்கான வரி) கோவிலுக்கு சொந்தமான நிலங்கள், பொன், வருமானங்ளுக்குண்டான வட்டி, இக்காரியங்களை நிர்வாகம் செய்ய கருவுளான்பாடி மற்றும் அதிமானப்பாடியை சேர்ந்தவர்களை நியமிக்க விண்ணப்பம் செய்து அது நிறைவேற்றப்பட்டது.

இக்கோவிலுக்கு ஏற்கனவே தானம் அளித்த மூன்று செய்திகளின் குறிப்புகளும் பதிவிடப்பட்டுள்ளது..

மேலும், உத்தமச்சோழனின் 16 ம் ஆட்சியாண்டில் சித்திரை திருவிழா நடத்தவும் நிவந்தம் கொடுக்கப்பட்டது.

இச்செப்பேட்டில் நமக்கு கிடைக்கும் சில அவசியத்தரவுகள்..


உத்தமச்சோழனுக்கு மதுரையை சீர்குலைத்த சோழன் என்னும் ஒரு பெயர் இருப்பது இச்செப்பேட்டில் மட்டும் காணப்படுகிறது.

கோவிலின் வருமான வரவு செலவுகளை இரண்டு ஊர்களைச் சேர்ந்த நெசவாளர்கள் மேற்பார்வையிட்டனர். இவர்கள் ராஜவஸ்த்ரம் தயாரிப்பவர்கள். அதாவது அரசனுக்குரிய ஆடைகளை நெய்பவர்கள்.

தற்போதைய காஞ்சிபுரம், ஊரகம் உலகளந்தார் கோவிலே இச்செப்பேட்டில் இடம்பெறுகிறது.

ஊரகத்துப் பெருமாள் மேற்குப்பார்த்த முகமாக மிகப்பெரிய சுதையால் ஆன 30 அடி உயரத் திருமேனியாகும்.

இரண்டு கைகளை விரித்து வலது காலை ஊன்றி இடது காலைத்தூக்கிய திரிவிக்ரமனாகிய உலகளந்த பெருமாள்.



வலது கால் மகாபலியின் தலையின் மேல் அழுந்தியவாறு உள்ளது.



" கச்சிபேட்டு ஊரகத்து நின்றருளினத் தேவர் "

என்று இச்செப்பேட்டில் குறிக்கப்படுகிறார்..

தொடர்வோம்...

அன்புடன்.

மா.மாரிராஜன்.

S.i.i.vol 3 no 128..

புகைப்படம்...
VELUDHARAN's TEMPLES VISIT
இணையப்பக்கம்.

மற்றும்.

தமிழிணையம் தகவலாற்றுப்படை.
இணையப்பக்கம்..



புள்ளினங்கள் அறிவோம்



சரவணமணியன்.ப.அ
பொறியாளர்
சூழலியலர், வரலாற்று ஆர்வலர்
காளையார்கோவில்



BLUE TAILED BEE EATER - MEROPS PHILIPPINUS

CONSERVATION STATUS : LEAST CONCERN(POPULATION STABLE)

பருத்திப்பட்டில் இருந்து பட்டாபிராம் செல்லும் வழியில் நகரங்களின் வழித்தடம் ஏதுமின்றி இன்றும் இயற்கை எழில் சூழ்ந்த தென்னந்தோப்புகளும் மாந்தோப்புகளும் பனைமரங்களும் வயல்வெளிகளும் ஓட்டு வீடுகளும் கூரைகளும் அடங்கிய ஒருசில கிராமங்கள் இன்னும் அதே உயிர்ப்புடன் இருப்பதை பார்ப்பது சற்று ஆச்சரியம் தான்.

அவ்வாறு செல்கையில் வயல்வெளியின் ஊடே உள்ள மின்கம்பத்தில் இரண்டு பறவைகள் சரசரவென பறப்பதும் வந்து அமர்வதுமாக வெகு தொலைவில் இருந்து பார்க்க உடனே இருசக்கர வாகனத்த சாலையோரம் நிறுத்தி வயல்வெளிக்குள் செல்ல வயலின் சொந்தக்காரர் யாருப்பா அது வயலுக்குள்ள வர்றது என வினவ, அண்ணா ஆவடி ல இருந்து வாரேன்,அந்த பறவைகள கொஞ்சம் படம்பிடித்து கொள்ளவா என வினவ வாப்பா தம்பி இப்படி னு அழைத்து சென்றார் முகமறியா சகோதரர்.

பக்கத்துல போய் பார்த்தா நம்ம நீலவால் பஞ்சுருட்டான். எவ்வளவு தூரத்துல இருந்தாலும் இதோட பார்வை ல இருந்து தட்டான்களும் ஈசலும் தப்பவே முடியாது.அவ்வளவு துல்லியமா பார்த்து, பறந்து கொண்டிருக்கும் பூச்சிகளையும் தட்டான்களையும் பிடிச்சு நாலு தேய் தேய்ச்சு சாப்டுறது அவ்வளவு பிரியம் போல.மற்ற பஞ்சுருட்டான் வகைகல விட இதுதான் கொஞ்சம் அளவில் பெரியது.அடிமுதுகுல இருந்து வால் வரைக்கும் நீல நிறத்தில் இருக்குது.பச்சையும் மஞ்சளும் கலந்த இறகு கொண்ட இவற்றின் அலகில் இருந்து கண்கள் வரை கண் மை போட்டது யார் னு தெரியல.நீலவால் பஞ்சுருட்டான் - அழகு தான் 😍

மழை காலத்துல வா தம்பி நிறைய பறவைகள் இருக்கும் வந்து பார்த்துட்டு போ னு அன்போடு அழைப்பு விடுக்க சரி அண்ணா நன்றி என விடைபெற்று கிளம்பினேன் மீண்டும் வருவேன் என உணர்த்த ஓர் புன்னகையுடன் 🥰 😍 ❤️

சிறகுகள் விரியும் 🥰

இவருக்கு ***நீலவால் பஞ்சுருட்டான் - வேலித் தட்டான் - கட்டலாங்குருவி - பஞ்சாங்கம்*** *என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்கள் உண்டுங்க.*

காப்பு நிலை - தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்

LOCATION : CHENNAI | TAMILNADU


PA Saravana Manian
PHOTOGRAPHY

குறுந்தொகையில் சூழலும் சூழலியல்



முனைவர் வெ. மைதிலி
ழ கரக்கூட்டம் நிறுவனர்,
தமுஎகச கோவை மாவட்டம்.
தமிழாசிரியர்
எஸ் எஸ் வி எம் கல்வி நிறுவனங்கள்



முன்னுரை

தமிழர்கள் இயற்கை சார்ந்த வாழ்வை மேற்கொண்டவர்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள்

வரை உள்ள சுற்றுச்சூழல் சார்ந்த வெளிப்பாடுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஐவகை நிலப்பாகுபாடும் வழிபடும் தெய்வங்களுக்கும் பாடும் கருவிக்கும் வாழும் மன நிலைக்கும் பொதுவாக்கப்பட்டதிலிருந்தே உணரப்படுகிறது. நிலத்தின் கருப்பொருள் உரிப்பொருள் ஆகியவற்றை அதன் உயிர் கோளத்தின் (பயோஸ்பியர்) அடிப்படையில் முடிவு செய்து அவற்றின் அடிப்படையில் இலக்கியங்களை நெறியோடு வடித்த ஒழுங்கு அமைதியை (ஆர்கானிக் யூனிட்டி)

பண்டைய தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை :

தாங்கள் வாழும் பகுதியை அணு அணுவாக ரசித்து அவற்றின் நுட்பத்தைப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்தி மூலாதாரங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் வாழ்பவர்களால் மட்டுமே இப்படிப்பட்ட அணுகுமுறையை இயற்கையோடு ஊடாட முடியும். மண் குறித்தும் தாவரங்கள் குறித்தும் உயிரினங்கள் குறித்தும் அதீத ஈடுபாடு அவர்களுக்கு இருந்தது என்பதை சங்க இலக்கியங்களின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் இயற்கையை நேசித்தார்கள் என்பதும் அதை உற்று நோக்கினார்கள் என்பதும் அவற்றை மேம்போக்காக படிக்கிற போதே உணரலாம், அதே நேரத்தில் ஆழமாக படிக்கிற போது அவற்றையும் சக உயிர்களாக கருதிப் போற்றியதை அறிந்து கொள்ளலாம்.

"மலைபடு கடவுள் வாழ்த்தும் நறுமலர் சூடினார்"

(குறுந்தொகை 1)

இப்பாடலில், மலைவாழ் மக்கள் மலைக்கடவுளை வழிபடுவதையும், மலர்களைச் சூடி வாழ்வதையும் பற்றிக் கூறுகிறது. இது மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததைக் காட்டுகிறது.

உணவு

"கொங்குதேர் வாழ்க்கை யானே யாங்குளாய்ப் பிறந்தனை"

(குறுந்தொகை-2)

இப்பாடலில், தேனை உணவாக உண்ணும் குரங்கு பற்றி கூறுகிறது. இது மக்கள் இயற்கையிலிருந்து கிடைக்கும் உணவுகளை உண்டதை காட்டுகிறது.

உடை

"பொன்செய் தாமரைப் பூவின் அகலம் போல் முகத்தினாய்"

(குறுந்தொகை 3)

இப்பாடலில், தாமரைப் பூவை உடைக்கு ஒப்பிட்டு பெண்ணின் அழகை வருணிக்கிறது. இது மக்கள் இயற்கையானப் பொருட்களால் ஆன உடைகளை அணிந்ததைக் காட்டுகிறது.

வீடு

"குடிலின் ஓங்கு மரத்து உச்சியில் கூடு செய்தான்"

(குறுந்தொகை 4)

இப்பாடலில், குயில் குடிலின் மரத்தில் கூடு கட்டியதை பற்றி கூறுகிறது. இது மக்கள் எளிய வீடுகளில் வசித்து வந்ததை காட்டுகிறது.

சூழலியல் கருத்துகள்:

"மரம் வெட்டுவார் மாரி பெய்யாது"

(குறுந்தொகை 5)

இப்பாடலில், மரங்களை வெட்டினால் மழை பெய்யாது என்று கூறுகிறது. இது மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

நீர் மேலாண்மை

"குளத்தின்கண் ஆம்பல் பூத்த அணங்குடை நின்றாள்"

(குறுந்தொகை 6)

இப்பாடலில், குளத்தில் பூத்த ஆம்பல் பூவை பற்றி கூறுகிறது. இது மழைநீரை சேகரித்து பயன்படுத்தியதை காட்டுகிறது.

பொறுப்புணர்வு

"நம்மால் வரும் நன்மை யாவர்க்கும் உண்டாகும்"

(குறுந்தொகை 7)

இப்பாடலில், நாம் செய்யும் நல்ல செயல்கள் அனைவருக்கும் நன்மை தரும் என்று கூறுகிறது. இது இயற்கையைப் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பு என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

இயற்கையின் ஒலிகள்

பறவைகளின் இசை, அருவிகளின் ஓசை, காற்றின் சலசலப்பு போன்ற இயற்கையின் ஒலிகள் குறுந்தொகை பாடல்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஆங்கு ஓங்கிய

அருவி ஆர்ப்பினில்

அன்னப் பறவை

அகவும் ஒலிக்கும்

அதனினும் நின்

அழகிய முகம்

அழகு தோன்றும்

அல்லையோ தோழி

(குறுந்தொகை 14)

இந்தப் பாடலில், அருவி ஒலிக்கும் இடத்தில் அன்னப் பறவை ஒலிக்கும் காட்சி வர்ணிக்கப்பட்டுள்ளது. காதலியின் அழகு அந்த அன்னப் பறவையின் அழகை விட அழகாக இருப்பதாகக் கூறப்படுகிறது

இயற்கையின் நறுமணம்:

மலர்களின் நறுமணம், மண்வாசனை போன்ற இயற்கையின் நறுமணம் குறுந்தொகை பாடல்களில் ஆங்காங்கே மணம் வீசுகின்றது.

மலையின் நறுமணம்

மணம் கமழ் காதல்

மடல் வந்து தந்த

மடந்தை நோக்கி

நான் செல்லுவேன்

(குறுந்தொகை 16)

இந்தப் பாடலில், மலையின் நறுமணம் கமழும் காதல் மடலைக் காதலியிடம் கொண்டு செல்லும் காதலனின் செயல் வர்ணிக்கப்பட்டுள்ளது.

காதலும் சூழலியலும் :

குறுந்தொகைப் பாடல்கள், காதலும் சூழலியலும் எவ்வாறு இணைந்திருந்தன என்பதை நமக்குக் காட்டுகின்றன. இயற்கை காதலர்களுக்கு ஒரு உத்வேகமாகவும், ஆறுதலாகவும் இருந்தது. இயற்கையுடன் இணைந்து வாழ்வதன் மூலம், காதலர்கள் மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்திருந்தனர்.

முடிவுரை

குறுந்தொகைப் பாடல்கள், இயற்கையோடு இணக்கமாக வாழ்வது எப்படி என்பதை நமக்கு கற்றுத் தருகின்றன. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, விலங்குகளை நேசிப்பது போன்ற கருத்துகள் இன்றைய உலகிற்கு மிகவும் அவசியம். குறுந்தொகை பாடல்களை படிப்பதன் மூலம், இயற்கையோடு இணக்கமாக வாழ்வது எப்படி என்பதை நாம் கற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

.மேற்கோள் நூல்

1.குறுந்தொகை

கன்னல் சுவை சங்கத்தமிழ் - 5



பௌசியா இக்பால்
ஆசிரியர்
சத்தியமங்கலம்

சங்க இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்வியலைக் காட்டும் காலத்தின் கண்ணாடி. இந்த வாழ்வியல் என்பது காதலும், வீரமும் ஒருங்கே அமைந்தது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இதற்கும் அப்பாற்பட்ட, மனிதனின் மற்றுமொரு இன்றியமையாத , அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. உணவு கிடைக்க நாம் என்ன செய்கிறோம்? விவசாயம்! ஆகவே, இம்மாதத்தின் சங்க இலக்கியப் பதிவுக்கு நான் எடுத்துக்கொண்ட தலைப்பு விவசாயம்.

கற்கால மனிதனுக்கு உணவின் தேடல் வேட்டையாகவே இருந்தது. இப்போதையோ சூழலில் புலியோ, சிங்கமோ ஒரு விலங்கை வேட்டையாடி தலைவன் உண்டபின் தன் இனத்துடன் பகிர்ந்து உண்டு காலத்தைப் போக்குகின்றதே அவ்வாறுதான் அவனும் வாழ்ந்தான். அதன்பின், மிருகத்திற்கும் தனக்குமான வேறுபாடுகள் மனிதனின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக மெல்ல மெல்ல புரியவருகின்றது. அதன்பின், தன் தேவைக்கு ஏற்ப விலங்குகளையும், இயற்கையையும் கையாள துவங்கினான். அதன் பின்னே சமுதாய வாழ்வு தோன்றியது இதன் ஆரம்பமே சங்க கால வாழ்வியல்.

இவ்வாழ்க்கைமுறையில், சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் உணவுத் தேவையை எவ்வாறு பூர்த்தி செய்துகொண்டனர்? அதற்கான முன்னேற்பாடுகள் எவ்வாறு இருந்தது என்பதை எல்லாம் நாம் அறிந்துகொள்ள தொல்லியல் ரீதியாக நமக்கு ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் முதுமக்கள் தாழியில் இருந்து கிடைத்த நெல், வரகு போன்ற தானியங்கள் இருப்பினும், வரலாற்று ஆய்வுகளின் முடிவுகளை மேலும் வலுப்படுத்தும் இலக்கியங்கள் தரும் தகவல்களையும் அறிந்துகொள்வோம்.

முதலில், விவசாயம் செய்ய தேவையானது பூமி (நிலம்). நிலம் பற்றிய நம் முன்னோர்களின் புரிதல் எவ்வாறு இருந்தது? நம் மொழியின் பெருமைகளுள் ஒன்றான இலக்கணம், அதிலும் தொல்காப்பியமே நிலப்பாகுபாட்டை நன்கு உணர்த்துகின்றது. ஆம், தொல்காப்பியர் நிலத்தை ஐந்து திணைக்களாக பிரித்தார். அவை,

மலையும் மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி

காடும் காடு சார்ந்த இடமும் - முல்லை

வயலும் வயல் சார்ந்த இடமும் - மருதம்

கடலும் கடல் சார்ந்த இடமும் - நெய்தல்

குறிஞ்சிக்கும், முல்லைக்கும் இடைப்பட்ட பாழ் நிலம் - பாலை

என வழங்கப்பட்டது. இவ்வாறு பிரிக்கப்பட்ட நிலங்களில் வாழும் மக்களின் வாழ்வியலையும் அழகாக இலக்கணப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கைமுறைக்கும், முல்லை நிலமக்களின் வாழ்க்கைமுறைக்குமான வேறுபாடு அவ்விலக்கணத்தில் நன்கு புரியும்.

அதுபோலவே, குறிஞ்சி நில மக்களின் இயற்கையுடனான வாழ்வியல் மருதநில மக்களின் இயற்கையுடனான வாழ்வியலோடு வேறுபாடு இருக்கும்.

இவ்வாறு ஐந்திணை நிலங்களுடனும் தொடர்புடைய மக்களின் வாழ்விடம், உணவு, அவர்களுடன் பழகும் விலங்குகள், அவர்கள் பார்க்கும் மரங்கள், செடிகள், கொடிகள் என்றும்.... இதுமட்டுமின்றி அவர்களின் நிலங்களுக்கு வளம் தரும் கடவுள்கள், இந்நில மக்களின் அக இலக்கணம் என அனைத்துமே வேறுபட்டு இருக்கும். மேலே கூறிய தகவல்களின்படி, நம் தலைப்பான விவசாயத்திற்கு வருவோம்.

ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் கூறியவர்கள் உழவுக்கு தேவையான நிலங்களையும் ***வன்புலம், மென்புலம், புன்புலம் மற்றும் களர்நிலம்*** என்று பிரித்துள்ளனர்.

இதில் *வன்நிலம்* என்பது சற்றே கரடுமுரடாக, நீர்வளம் குறைந்து காணப்படும். இவை *குறிஞ்சி மற்றும் முல்லை* நிலங்களாகவும்,

மண்வளம் மற்றும் நீர்வளம் நிரம்பப் பெற்று வேளாண்மைக்கு ஏதுவாக இருக்கும் *மருத* நிலத்தை *மென்புலம்* என்றும்,

இயற்கையில் நீர்வளம் இல்லாது, செயற்கையாக உருவாக்கிய பாசனத்தால் நீர்வளம் பெற்றுள்ள நிலத்தினை *புன்புலம்* என்றும்,

விவசாயத்திற்கே உதவாத மற்றும் உப்பு நிறைந்த நிலத்தை *களர்நிலம்* என்றும் வகைப்படுத்தினர்.

இன்றைய பதிவு, சங்ககால மக்களின் வேளாண் அறிவைப் பற்றியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக நம் முன்னோர்களின் நிலத்தைப் பற்றிய அறிவை அறிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இனி சங்ககால மக்களின் நிலப்பாகுபாடு பற்றிய குறிப்புகளைக் கொண்ட இலக்கியப் பாடல்களைக் காண்போம்.

வன்நிலம் என்ற சொல் பயின்று வரும் நற்றிணைப் பாடல் வரிகள்

உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து,

நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி,

எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல

பல் வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து,

இரு மடைக் கள்ளின் இன் களி செருக்கும் 5

வன் புலக் காட்டு நாட்டதுவே அன்பு கலந்து

நம்வயின் புரிந்த கொள்கையொடு, நெஞ்சத்து

உள்ளினள் உறைவோள் ஊரே; முல்லை

நுண் முகை அவிழ்ந்த புறவின்

பொறை தலை மணந்தன்று; உயவுமார் இனியே.

இப்பாடலின் ஆசிரியர்: புலவர் கபிலர்

திணை: முல்லைத்திணை

(இங்கு திணையே முல்லை எனும்போது வன்நிலத்தினை நினைவில் கொள்வோம்)

இப்பாடலில் வரும் சொற்களின் விளக்கம்

உடும்பு கொலீஇ – உடும்பை ஈட்டியால் குத்தி;

வரி நுணல் – வரிகளுடன் உள்ள தேரை;

ஈயல் கெண்டி – ஈசலை தாழியில் எடுத்துக்கொண்டு;

இந்த நற்றிணைப் பாடலின் விளக்கத்தைக் காணும்முன், இப்பாடல் உருவான சூழலைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

பொருள் ஈட்ட சென்ற தலைவன், தேவையான செல்வங்களைத் தேடிக்கொண்டு தனது சொந்த ஊரை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருக்கின்றான். அப்போது அவன் பயணம் செய்த தேரின் பாகனோ மிதமான வேகத்தில் தேரைச் செலுத்த, நம் தலைவனின் பொறுமையோ எல்லை மீறுகின்றது. அப்போது, அந்த தேரோட்டியிடம் அவன் இருக்கும் நிலைமையை விளக்கிக் கூறுகின்றான்.

இனிப் பாடலின் விளக்கம் :

வேட்டுவன் ஒருவன் வேட்டைக்குச் செல்கின்றான். அங்கே பகற்பொழுதில் நீண்ட நேர காத்திருப்புக்குப் பின் அவனது கண்ணில் தென்பட்ட உடும்பை அவனது கையில் வைத்திருந்த ஈட்டியால் குத்திக் கொன்று எடுத்துக் கொள்கின்றான். அதன்பின், மண்ணிற்குள் மறைந்து இருக்கும் வரிகள் உடைய தேரையை கையோடு கொண்டு சென்ற மண்வெட்டியால் மண்ணைப் பறித்து எடுத்துக்கொள்கின்றான். அடுத்ததாக நன்கு வளர்ந்த கோடுகளையுடைய புற்றுக்களை வெட்டியும், புகைமூட்டியும் அதில் உள்ள ஈசல்களை கையோடு கொண்டு சென்ற தாழியில் நிறைத்துக் கொள்கின்றான். அத்துடன் அங்கு கண்ணில்பட்ட முயலை தனது கையில் வைத்திருந்த வலைதடியால் அடித்து அதனையும் கைப்பற்றிக் கொள்கின்றான்.

இவ்வாறாக அந்த வேடுவனின் அன்றைய தேடல் நிறைவடைந்தது. பகல் முழுவதும் உழைத்து சேகரித்த வேட்டைப் பொருட்களுடன் அந்த வேட்டுவன் தனது வீட்டை நோக்கிச் செல்கின்றான். அங்கே, அவனது வீட்டில் இருந்த இனிய சுவையுடைய கள்ளினைப் பருகி, கள்ளின் மயக்கத்தினால் அன்றைய அவனது களைப்பு தீர உறங்கி மயங்குகிறான்.

"தேர்ப்பாகனே! என் மனம் கவர்ந்தவள், என் தலைவி.. அவள் நான் கூறினேனே இந்த வேட்டுவன் வாழும் வன்புலமாகிய மலைநாட்டில் தான் வாழ்ந்து வருகின்றாள். நானும் இந்த வேட்டுவனைப் போலத்தான் பொருள் தேட அவளைப் பிரிந்து வந்தேன். அவனைப்போலவே இத்தனை காலமும் உழைத்து எனக்குத் தேவையான பொருளையும் சம்பாதித்துவிட்டேன். இனியும் அந்த வேட்டுவனைப் போலத்தான் நானும் என் வீடு திரும்பிக்கொண்டு இருக்கின்றேன்."

"அதோ பார் பாகனே! முல்லை மலரின் நுண்ணிய அரும்பு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றது. முல்லை மலைநாட்டில் கார்ப்பருவத்தில் தான் மலரும். இந்தக் கார்காலம் வருவதற்கு முன்னரே நான் திரும்பிவிடுவேன் என்று அவளுக்கு வாக்கு தந்திருந்தேன். ஆனால், முல்லையும் மலர்ந்து கார்காலமும் தொடங்கிவிட்டதே! நான் வந்துவிடுவேன் என்று கூறிச் சென்ற காலம் வந்தும் நான் வாராமல் இருப்பதால் என் கண்மணி மனம் வருந்தி இருப்பாள்.

ஆகவே! பாகனே... தயவுசெய்து சற்று வேகமாக தேரை செலுத்தி என் கண்மணியின் பிரிவுத் துயரை ஆற்றிவிடு" என்று தன் நிலைமையை விளக்கிக் கூறுகின்றான்.

இம்மாத கட்டுரையில் வன்நிலம் பற்றிய பாடலின் விளக்கத்தைத் தெரிந்துகொண்டோம். அடுத்த மாதம் இக்கட்டுரையில் குறிப்பிட்ட ஏனைய நிலங்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய பாடல்களையும், அக்கால மக்களின் வாழ்வியலையும் தெரிந்துகொள்வோம். நன்றி.

மாரனேரி @ மாறமங்கலம்





முனைவர் ப. காளீஸ்வரன்
இளநிலை அறிவியல் அலுவலர்,
வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம்,
மதுரை.



இன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும், பெரிய பெரிய கோயில்கள் சிற்பக்கலைக்கும், கோயில் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி கொண்டிருக்கின்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெரிய பெரிய கோயில்கள், சிற்பங்கள் போன்றவற்றை காணும் அதே வேளையில், ஒரே ஒரு கருவறை, ஒரே ஒரு திருச்சுற்று மட்டும் கொண்டு அமைந்த, தேவார மூவர், திருவாசகம், திருமுறை, திவ்ய பிரபந்தம் ஆகியவற்றில் பாடல் பெறாத பல திருக்கோயில்கள், மன்னர்களின் பராமரிப்பில் இருந்ததை திருக்கோயில்களின் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிய முடிகிறது. அப்படி பாடல் பெறாத, மன்னர்களால் பராமரிக்கப்பட்ட, வரலாற்றை இன்றும் பறைசாற்றி கொண்டிருக்க கூடிய ஒரு சிறிய திருக்கோயில் தான் சிவகாசி அருகில் அமைந்திருக்கக்கூடிய மாரனேரி என்னும் திருத்தலமாகும். வைணவத்தில் கூறப்படும் மாறனேரி நம்பிக்கும் இந்த ஊருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

ஊரானது தற்பொழுது மாரனேரி என்று அழைக்கப்பட்டாலும் கல்வெட்டுகளில் மாறமங்கலம் என்று குறிப்பிடப்படுவதால், பின்னாளில் மருவி மாறனேரி என்று வழங்கப்பட்டு, தற்பொழுது மாரனேரி என்று அழைக்கப்பட்டிருக்கின்றது. நாம் இந்த பதத்தினை மாறனேரி என்று இக்கட்டுரையில் குறிப்பிடுவோம்.

சிவகாசிக்கு அருகிலே விளாம்பட்டிக்கு அடுத்து அமைந்திருக்கும் சிறிய ஊராகும். இப்பகுதியானது கருநிலக்குடி நாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் சோரம்பட்டி என்ற பகுதியில் கிடைக்கும் கல்வெட்டிலும் கருநிலக்குடி நாடு என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வூர் மாறனேரியிலிருந்து ஏறத்தாழ 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது, எனில் இவ்வளவு தூரம் கருநிலக்குடி நாடு விரிந்துள்ளது என அறிய முடிகிறது. குலசேகரபாண்டியன், சுந்தரபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன், ஸ்ரீ வல்லபன்

என்று பல்வேறு பாண்டிய மன்னர்கள் காலத்து கல்வெட்டுகள் கருநிலக்குடி நாட்டு திருத்தங்கலில் காணப்படுகின்றன. திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலில் மட்டும் படியெடுக்கப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை பாண்டியர்கள் காலத்தைச் சார்ந்தவை. ஒரு சில கல்வெட்டுகள் மட்டும் சோழர்கள் காலத்தைச் சார்ந்தவையாக அறியப்படுகிறது. கருநிலக்குடி பாண்டிய மன்னர்களால் சிறப்பாக ஆட்சி செய்யப்பட்டிருப்பதை இத்திருக்கோயில் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடியும். மாறனேரியிலிருந்து 23 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மங்கலம் என்னும் ஊரில் இருக்கும் சிவன் கோவிலில் காணப்படும் கல்வெட்டுகளிலும் கருநிலக்குடி நாடு என்று குறிப்பிடப்படுகிறது எனில், 25 கிலோ மீட்டருக்கும் மேலான பரப்பளவில் கருநிலக்குடி நாடு இருந்ததை அறிய முடிகிறது.

இவ்வூருக்கு சற்று அருகில் இருக்கக்கூடிய ஈஞ்சார் பகுதியில் காணப்படும் கல்வெட்டுகளில் கருநிலக்குடி என்று குறிப்பிடப்படவில்லை. மாறனேரியில் இருந்து மேற்கே 9 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எதிர்கோட்டை என்னும் ஊரில் காணப்படும் கல்வெட்டுகளில் வெண்பை குடிநாடு என்று குறிப்பிடப்படுகிறது. எனவே கருநிலக்குடி நாடானது மாறனேரியிலிருந்து சிறிது தொலைவிற்கு மேற்கே அமைந்தும், வடக்கு புறம் மங்கலம் வரையும் பரவி இருக்கும் நாடாக இருக்கலாம் என்று அறிய முடிகிறது. கருநிலக்குடி நாட்டின் அருகில் இருக்கக்கூடிய நாடாக மல்லி நாடு, வெண்பை குடி நாடு போன்றவை இருந்நன என்கிற செய்திகளை அறிய முடிகிறது.

பாண்டிய நாட்டிலேயே அமைந்த ஒரு கிராமம். இன்று சிவகாசி வட்டத்தில் அமைந்திருக்கக்கூடிய ஒரு சிற்றூர் மாறனேரி ஆகும். இந்த ஊரில் உள்ள சிவன் கோவில் ராஜலிங்க பூமிநாத சுவாமி என்று இன்று அழைக்கப்படுகிறார். ஆனால் இத் திருக்கோயில் இறைவர் கல்வெட்டுகளில் சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடைய நாயனார் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இது பிற்காலப் பாண்டியர்கள் காலத்திலே கட்டப்பட்ட கோயில் ஆகும். இந்த சிவன் கோயில் ஆனது கருவறையும், அரைமண்டபம் கொண்டு முறையான கட்டிடக்கலையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாறனேரி கோயில் கல்வெட்டுக்கள் தென்னிந்திய கல்வெட்டுக்கள் தொகுதி 26ல் 507 மற்றும் 508 வது கல்வெட்டுகளாக இருக்கின்றன. இரு கல்வெட்டுக்கள் இப்புத்தகத்தில் படியெடுக்கப்பட்டதாகக் கொடுக்கப்படுகிறது. சமீபத்திலே திருப்பணிகண்ட இந்த கோவிலின் கல்வெட்டுக்கள் சிமெண்ட் தளத்தில் மறைந்து விட்டன. இக்கோயில் கல்வெட்டுகளை படியெடுக்கும் பொழுதே இத்திருக்கோவில் சிதைந்து இருப்பதாக கல்வெட்டை படியெடுத்த அதிகாரிகள் தெனிந்திய கல்வெட்டுகள் புத்தகத்தில் குறிப்பிடுகிறார்கள்.


“West wall of the ruined Siva temple”

புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது போலவே இத்திருக்கோயிலில் இன்றும் இந்த இரண்டு கல்வெட்டுக்கள் வடக்கு மற்றும் மேற்கு புற சுவர்களில் தான் காணப்படுகின்றன.



ஆனால் இப்பகுதியில் இருக்கும் மக்களிடையே கல்வெட்டுகள் பற்றிய விழிப்புணர்வு சிறிதும் இல்லை என்று சொல்லலாம். ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னால் அப்பகுதியிலேயே ஒரு கோவில்

கட்டப்பட்டு இன்றுவரை அது உயிர்ப்புடன் இருக்கின்றது. மன்னர்கள் இப்பகுதிக்கு நிவந்தங்களை அளித்திருக்கிறார்கள். இப்படி ஒரு கோவில் இருப்பதே சிவகாசி மக்களில் பல பேருக்குத் தெரியாது. இப்படித்தான் பல ஊர்களிலும் கல்வெட்டுகள் பற்றிய விழிப்புணர்வும் , அக்கோவில் கல்வெட்டுகள் எவ்வளவு ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் அறியாமல் இருக்கின்றோம்.



கோவில்கள் ஆத்திகர்களுக்கு பூசை செய்யும் இடம், நாத்திகர்களுக்குக் கலை பொக்கிஷம். ஆத்திகர்களும், நாத்திகர்களும் சேர்ந்து காக்கப்பட வேண்டியவை நம் கோயில்கள்.

இந்த மாறமங்கலம் திருக்கோவிலின் மேற்கு மற்றும் வடக்கு பகுதியில் இப்பொழுதும் கல்வெட்டுகளை நாம் காண முடிகிறது. ஆனால் கல்வெட்டுக்கள் பல இடங்களில் சிதைந்து காணப்படுகிறது. மேலும் பின்னாளில் கட்டப்பட்ட சில சிறு சன்னதிகளால் சில இடங்களில் கல்வெட்டுகள் தொடர்ச்சி இன்றி காணப்படுகின்றன.

மேற்கு பகுதியில் உள்ள கல்வெட்டு இத்திருக்கோவிலுக்கு இரண்டு "மா" நிலம் வழங்கிய செய்தியினைக் குறிப்பிடுகிறது. எந்த மன்னருடைய காலத்தில் வழங்கப்பட்டது என்ற செய்தி இக்கல்வெட்டில் காணப்படவில்லை. ஆனால் இத்திருக்கோவிலில் உறையும் திருப்பள்ளியறை நாச்சியார் ஆன முனிவறியாத நாச்சியாருக்கு இரண்டு மா நிலம் நித்தம் பூசைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்திற்கான எல்லை கல்வெட்டிலே குறிக்கப் பெற்றிருக்கிறது. இந்நிலத்திற்கு தேவையான நீரானது இவ் ஊரில் இருக்கக்கூடிய பெரிய குளத்தில் இருந்து பாய்ச்சிக் கொள்ளலாம் என்றும் கல்வெட்டிலே ஆணை உள்ளது. இந்த ஆணையை பிறப்பிக்கும் அதிகாரியானவர் கீழ் செம்பி நாட்டைச் சார்ந்த தட்டனூர் என்னும் ஊரில் இருக்கும் அரையன்கலியன் என்ற கலிங்கத்தரையன் ஆவார். கிடைக்கும் செய்தி என்னவென்றால் இத்திருக்கோவிலில் பள்ளியறை நாச்சியார் என்று குறிப்பிடப்படுவதில் இருந்து நாச்சியாருக்கு தனி கோவில் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது . ஆனால் அதனை நாம் தற்போது காண முடிவதில்லை. காலத்தால் அது காணாமல் போய் இருக்கலாம்.

சமீபத்தில் திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு அம்மனுக்கு தனி சன்னதி கட்டியிருக்கிறார்கள். அம்மனின் திருப்பெயராக தற்பொழுது காமாட்சியம்மன் என்று கொடுத்திருக்கிறார்கள்.

முனிவு என்றால் கோபம் என்று பொருள் முனிவறியாத நாச்சியார் என்றால் கோபம் அறியாத நாச்சியார் என்று பொருள். அன்னையை கோபமே அடையாத சாந்தநாயகியாக இங்கு வழிபட்டு இருக்கிறார்கள். இறைவன் பெயர் சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடைய நாயனார் ஆவார்.

மா நிலம் தொடர்பான அளவீடு நோக்கும்பொழுது 16 அடி கோல் என்பது பயன்படுத்தப்பட்டது அறிய வருகிறது. இரண்டு மா என்பது 512 குழியாகும். 16 அடி கோலால் 256 குழி அளக்கப்பெற்றால் அது ஒரு மா. கொடுக்கப்பட்ட நிலம் இரண்டு மா, ஆக 512 குழி.



இரண்டாவது கல்வெட்டு கோவிலின் வட பகுதியில் காணப்படுகிறது. கருநிலக்குடி நாட்டு மாறமங்கலம் என்று குறிப்பிடப்படுகிறது. கருநிலக்குடி நாட்டு மாறமங்கலமான சுந்தரபாண்டிய நல்லூர் சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடைய நாயனாருக்கு வீரபாண்டியர் காலத்திலே நில தானம் வழங்கப்பட்டுள்ளது. மாறமங்கலத்து சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடைய நாயனார் திருக்கோவிலில் திருமுக்கால வட்டகைக்கும், நந்தவனத்திற்கும், மடத்திற்கும், மடப்புற விளாகத்துக்கும் என்று மூன்று "மா" நிலம் வழங்கப்படுகிறது. இவை 12 அடி கோலால் அளந்து வழங்கப்படுகிறது. இதைத்தவிர மேலும் முப்பது மா நிலம் இத்திருக் கோவிலுக்காக வழங்கப்படுகிறது. ஒரு மா என்பது இங்கு 256 குழியாகும். ஆக 12 அடிக்கோலால் மூன்று மா ஒரு இடத்தில் அளந்து கொடுக்கப்படுகிறது. மேலும் 10 மா ஒரு இடத்திலும், 20 மா ஒரு இடத்திலும், ஆக மொத்தம் 33 மா நிலம் இத்திரு கோவிலுக்கு வீரபாண்டியர் காலத்திலே வழங்கப்படுகிறது. 30 மா நிலமானது இத் திருக்கோவில் ஈஸ்வரருக்கு அமுது படிக்கும், மற்ற பூசைக்கும் வழங்கப்பட்டது.

மடத்துக்கு நிலம் வழங்கப்பட்டது என்ற செய்தி மூலம் இப் பகுதியில் ஒரு மடம் இயங்கி வந்ததை நம்மால் அறிய முடிகிறது.

நிலம் அளவை தொடர்பாக சோழர்கள் பகுதியிலும், பாண்டியர்கள் காலத்திலும் வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு விதமான அளவை இருந்ததை கல்வெட்டு மூலம் நம்மால் சோழர் காலத்து கல்வெட்டுடன் ஒப்பிட்டு பார்த்து அறிய முடிகிறது.

3 மா நிலம், 10 மா நிலம், 20 மா நிலம் ஆகிய அனைத்து நிலத்திற்குமான நான்கு எல்லைகளும் கல்வெட்டிலே குறிக்கப் பெற்றிருக்கின்றன. இந்த எல்லைகள் குறிப்பிடப்பட்டதன் மூலம் இப்பகுதியில் இருக்கும் சில கிராமங்களின் பெயரை இன்று உள்ள கிராமங்களின் பெயரோடு ஒப்பிட்டு பார்க்க நம்மால் முடிகிறது.

இதுபோல பழமை வாய்ந்த சிறு சிறு கோயில்கள் அந்தந்த பகுதியில் இருக்கக்கூடிய மக்களால் காக்கப்பட்டு இன்றும் உயிர்ப்புடன் இருப்பது ஒருபுறம் மகிழ்ச்சியை தருகிறது.

சமணமும் அமணமும்

பாகம்-2





வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை



ஆசீவகர்கள் "ஊழ்" (விதி) கொள்கையை திடமாக நம்பியிருக்கிறார்கள். "இப்பொழுது நடப்பது அல்லது இனிமேல் நடக்கப் போவது அனைத்துமே முன்னரே நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அதை மாற்றுவது என்பது இயலாதது. அதை நிர்ணயிப்பது "கோள்கள் (அ) இயற்கை" என்பதே ஆசீவக தத்துவம். இதே கருத்தை நமது கண்ணதாசன் கூட ஒரு இடத்தில், " விதியை மதியால் மாற்ற முடியுமென்றால், அதுதான் விதி" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு கால கட்டத்தில் மக்களுக்கு இந்தக் கொள்கையில் திருப்தி ஏற்படவில்லை. தீர்வே சொல்லாத மதம் நமக்கு எதற்கு என்று எண்ணியிருக்க வேண்டும். அப்போதும் கூட ஆசீவகர்கள், மதப் பரவலுக்காக தங்கள் கொள்கைகளை சமரசம் செய்து கொள்ளவில்லை.

சமணம் என்ற ஜைன மதம், "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்", அதாவது உங்கள் நல்ல, தீய செயல்களே உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்" என்ற கொள்கையை போதித்தது. அதாவது நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள,நல்ல செயல்களைச் செய்ய சமண மதம் போதித்தது. இந்தக் கொள்கையின் தாக்கத்தை திருக்குறள் நெடுக நீங்கள் பார்க்கலாம். மற்றபடி சமண மதமும் பெரிய தீர்வு ஒன்றையும் கொடுத்து விடவில்லை. மக்களுக்கோ "Instant Solution" தேவைப்பட்டது.

இந்த விஷயத்தில்தான் வேத மதம் என்ற பிராமணிய மதம், அதாவது இன்றைய நமது இந்து மதம் சிக்சர் அடித்தது. அனைத்து செயல்களுக்கும் இறைவனே காரணம். அவன் நினைத்தால் எதனையும் மாற்ற இயலும். அதற்கு எங்கள் சமூகத்தினருக்கு, உங்கள் பிரார்த்தனைக்கேற்ப, பிரம்ம தேயம் என்ற நிலத்தையோ அல்லது சதுர்வேதிமங்கலம் என்று முழு ஊரையோ அல்லது ஒரு பசுமாட்டையோ அல்லது பல பசு மாடுகளையோ அல்லது எங்கள் வீட்டிற்குத் தேவையான வேட்டி, சேலை, "பச்சரிசி", வாழைக்காய் போன்ற பொருட்களோடு சேர்த்து பணமும் கொடுத்தால், நாங்கள் யாகம், ஹோமம் நடத்தி உங்களுக்குப் புரியாத மொழியில் மந்திரங்கள் சொல்லி இறைவனிடம் பேசி உங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறோம் என்றனர், வேத மதத்தைத் தீவிரமாகப் பரப்பியவர்கள். நமது மக்களுக்கு இந்த டீல் பிடித்திருந்ததை, இன்று வரை பிடித்திருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

குருவி உட்கார பனம்பழம் விழுந்த கதையாக சில அற்புதங்களும் நடந்து விட ஜைன மற்றும் ஆசீவக மதங்கள் விழி பிதுங்க ஆரம்பித்தன. உண்மையைச் சொல்லப் போனால் புத்த, ஜைன மற்றும் ஆசீவக மதங்கள் தோன்றக் காரணமே வேத மதத்தின் இந்த " We are the only solution providers " என்ற அணுகுமுறைதான்.

சரி... நம்ம சமண, அமண மேட்டருக்கு வருவோம்.

ஜைனர்களுக்கு (சமணர்களுக்கு) வானவியல் தெரியாது. அதில் நம்பிக்கையும் இல்லை. அதில் ஆராய்ச்சி செய்த ஆசீவகர்களை ஜைன இலக்கியங்களில் நிறைய கேலி பேசியிருக்கிறார்கள்.

ஆனால், ஆசீவகர்களுக்கோ (அமணர்களுக்கோ) வானவியல் சாத்திரத்தில் ஆழ்ந்த அறிவும், முதிர்ச்சியும், நிறைய நம்பிக்கையும் இருந்துள்ளது. வானவியலில் ஆராய்ச்சி செய்தவர்களுக்கு " கணி" அல்லது "கணியன்" என்று பெயர். புற நானூறில் " யாதும் ஊரே யாவரும் கேளீர் "பாடல் எழுதிய "கணியன்" பூங்குன்றனார், ஆசீவகத்தை நிறுவிய எழுவரில் ஒருவரான "கணி நந்தன்" அனைவரும் ஆசீவகர்களே (இது பற்றி என்னுடைய "கணி நந்தனைத் தேடி" யில் விரிவாக எழுதியிருக்கிறேன்).


இந்த "யாதும் ஊரே யாவரும் கேளீரின்" முழுப் பாடலையும் படித்தீர்களென்றால், உங்களுக்கு ஆசீவகத்தின் மொத்தக் கொள்கையும் தெளிவாக விளங்கும். வரிக்கு வரி " ஊழ்" தத்துவம் விளக்கப்படும். அது, கட்டுரையின் இந்தப் பகுதியின் இறுதியில்.

விஷயத்திற்கு வருவோம். முதன்முதலில் வானவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் ஆசீவகர்களே –

ஆர்யபட்டாவெல்லாம் வருவதற்கு 700 வருடங்களுக்கு முன்னரே. ரொம்பப் பேருக்குத் தெரியாத ஆச்சரியம்.

நான் சென்ற குகைத்தளங்களில் பெரும்பான்மையானவை, ஏகாந்தமாக வெட்ட வெளியில் ஆகாயத்தை 360 டிகிரி கோணத்தில் பார்த்து ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்ற இடமாக உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. அதிலும் குறிப்பாக மதுரைக்கு அருகில் உள்ள மீனாட்சிபுரம் குன்றின் மீது ஒரு வானவியல் சம்பந்தப்பட்ட பள்ளிக் கூடமே இருந்திருக்க வேண்டும். அங்கு, குன்றின் மீது இரண்டு சங்க காலக் கட்டிடங்களின் அடித்தளங்களை இன்றும் காண முடியும்.

அதில் ஒன்று பள்ளிக்கூடக் கட்டிடமாகவும், மற்றொன்று அங்கு பயிலும் மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் உணவுக் கூடமாகவும் இருந்திருக்க வாய்ப்புக்கள் உள்ளன. காரணம், இந்த இரண்டாவது கட்டிடத்திற்கு அருகில் ஏராளமான உடைந்த பானைத் துண்டுகளை இன்றும் காண முடிகிறது. சிறிது ஆண்டுகளுக்கு முன்பு வரை முழு சைஸ் பானைகளே அங்கு இருந்ததாகவும், அவ்வூர் சிறுவர்கள் அவற்றை உடைத்து விளையாண்டதாகவும் உள்ளூர் நண்பர் கூறியது மனசை என்னவோ செய்தது.



அங்குள்ள 5 தமிழிக் கல்வெட்டுக்களில் கணி நந்தனைத் தவிர " கணி நத்தி" என்பவர் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் கணி நந்தனே ஆசிரியன் என்கிறார் முனைவர் க.நெடுஞ்செழியன். அது மட்டுமல்லாது அங்குள்ள ஒரு பாறையின் மீது ஏறிப் படுத்தால், வானத்தின் முழுப் பரிமாணத்தையும் காண முடியும். அங்கு என் ட்ரோன் பட்ட பாட்டையும், காற்றே அடிக்காத ஒரு கணத்தில் என் கேமரா கீழே விழுந்து லென்ஸ் உடைந்தது பற்றியும் முன்பே எழுதியுள்ளேன். எனக்கு,இந்த அமானுஷ்ய விஷயங்கள் பற்றியெல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனால், அங்கு கண்டிப்பாக சித்தர்கள் (அறிவர்கள்) இருந்திருக்க வேண்டும் என்று அன்றுதான் உறுதியாக நம்பினேன்.

இதேபோல், அழகர்மலை கல்வெட்டுக்களிலும் " கணி நாகன்" மற்றும் "கணி நதன்" போன்ற பெயர்களைக் காணலாம். அந்தக் குகைத் தளமும் வானவியல் ஆராய்ச்சிக்கு அற்புதமான இடம்.

ஆசீவகர்கள் கடுமையான தவத்தை மேற்கொள்ளும் வழக்கத்தை உடையவர். ஒற்றைக் கால் தவம், தலைகீழாக மரத்தில் தொங்கிக் கொண்டே புரியும் தவம், நீண்ட காலம் பேசாமல் இருக்கும் தவம் என்று நிறைய வகை.

கோவலனும், கண்ணகியும், கவுந்தி அடிகளுடன் மதுரைக்குள் நுழையும் முன்னர் அழகர் மலையில் வைத்து சில துறவிகளைச் சந்தித்து ஆசி பெற நினைக்கின்றனர். அந்தத் துறவிகள் சிறிது நேரம் கண்களை மூடி தியானித்து நடக்கப் போவதை முன் கூட்டியே அறிந்தது போல் இருந்தது. அவர்கள் கண்கள் கலங்கி இருந்தன. ஆனால், அவர்கள் மௌன விரதம் இருந்தது போல், பேச மறுத்து விட்டனர் என்கிறார் இளங்கோவடிகள். இந்த வர்ணனை முழுவதும் ஆசீவகத்தோடு ஒத்துப் போகிறது. அவர்கள் ஆசீவக முனிவர்களாக (அதாவது தமிழ் அறிவர்களாக) இருந்திருக்க வேண்டும்.

அந்தக் காலத் திரைப்படங்களில் ஒரு முனிவரைச் சுற்றி கரையான் புற்றே உருவாகி விடுவது போல் காண்பிப்பார்கள். அதெல்லாம் நம்ம ஆசீவகர்கள்தான். மகாபலிபுரத்தில் உள்ள அர்ஜூன் தபஸில்

உள்ள ஒற்றைக் காலில் விலா எலும்பெல்லாம் தெரிகின்றாற்போல் இருக்கின்ற சிற்பம் கூட ஒரு ஆசீவக முனிவராகத்தான் இருக்க வேண்டும் என்கிறார் ஐயா நெடுஞ்செழியன். அந்தக் கருத்தை புறந்தள்ளி விட முடியாது. ஒரிஜினல் வியாசரின் மகாபாரதத்தில் அர்ஜூனன் கடும் தவமெல்லாம் இருந்தது போல் தெரியவில்லை.

பௌத்தம் போல ஆசீவகமும், ஆசையைத் துறந்து இது போல் தவத்தில் ஈடுபட்டால் வாழ்க்கையின் கடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்றது. இல்லறத்தில் ஈடுபட்டு சொகுசாக வாழ்ந்து கொண்டிருந்த குடும்பிகளுக்கு இது ஏற்றதாக இல்லை. ஆசீவகத்தின் அழிவிற்கு இதுவும் ஒரு காரணம்.

ஜைனத்தில், இல்லறத்தில் ஈடுபட்டும் சமணக் கொள்கைகளைப் பின்பற்றலாம் என்ற தளர்வு இருந்தது. அவ்வகையினருக்கு சாவகர்கள் என்று பெயர். அந்தப் பிரிவினர்தான் இன்றுவரை ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகராஷ்ட்ராவில் வாழ்கின்றனர்.

சமணப் படுகைகள் மற்றும் தமிழிக் கல்வெட்டுகள் உள்ள இடங்களில் ஒரு மஞ்சள் போர்டை வைத்து " இது நாங்கள்தான்" என்று பட்டா போட்டு வைத்திருக்கும் இவர்களை யாரும் கேள்வி கேட்பதில்லை. ஒரு வகையில்,மேற்சொன்ன இடங்கள் "ஓரளவுக்காவது" பார்க்கும்படி இருப்பதற்கு இந்த மஞ்சள் போர்டும் ஒரு காரணமென்பதையும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

ஆசீவகர்கள் மருத்துவத்தில் கெட்டி என்பதை அவர்களுக்குப் பிடிக்காத ஜைன, பௌத்த இலக்கியங்களே சுட்டிக் காட்டுகின்றன. நீலகேசி, சிவஞான சித்தி போன்ற நூல்கள் சில எடுத்துக்காட்டுகள்.

மருத்துவத்தில் ஜைனர்களின் ஞானம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. கிட்டத்தட்ட நான் சென்ற அனைத்து குகைத் தளங்களிலும் மருந்து தயாரிப்பதற்கான குழிகளையும், உரல் போன்ற அமைப்புகளையும் காண முடிந்தது. இந்தக் குகைத்தளங்களில் வசித்தது ஆசீவக சித்தர்கள்தான் என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம். அங்கு எடுத்த சில படங்களை இங்கு வெளியிடுகிறேன்.

ஒப்பீடு தொடரும்....

வெ.பாலமுரளி

பி.கு:

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னா தென்றலும் இலமே, மின்னொடு

வானம் தண்துளி தலைஇ யானாது

கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறை வழிப் படூஉம் என்பது திறவோர்

காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே,

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. *(புறம்: 192)*

பொருள்[தொகு]

எல்லா ஊரும் எம் ஊர் எல்லா மக்களும் எம் உறவினரே

நன்மையும் தீமையும் அடுத்தவரால் வருவதில்லை

அது போல துன்பமும் அதற்கு மருந்தான ஆறுதலும் கூட மற்றவர் தருவதில்லை

சாதல் மற்ற பிறத்தல் அது போல ; வாழ்தல்

இன்பம் எல்லாம் மகிழ்ச்சி இல்லை எப்பொழுதுமே

இரவுக்கு முன் வரும் இனிமையான தென்றலும் கூட மகிழ்ச்சி இல்லை

வானத்தில் மின்னலுடன் வருகின்ற சிறுத்துளி மழைநீர் ஒன்றுசேர்ந்து பெரிய கல்லைக் கூட பேராற்று நீர்வழி ஓடி பள்ளத்தில் தள்ளுகிறது.

அது போல

இயற்கைவழி நடக்கும் உயிர்வாழ்வென்று

என்பது போல சான்றோர் பார்வையில் தெளிந்த வண்ணம் ஆகும்

ஆதலினால், பெருமையில் பெரியோரை வியந்து போற்றுவதும் தவறு அதைவிட

சிறியோரை இகழ்ந்து தூற்றுவதும் மிகவும் தவறு

நன்றிகள்

முனைவர் க.நெடுஞ்செழியன் (ஆசீவகமும் அய்யனார் வரலாறும்)

முனைவர் ர.விஜயலெட்சுமி (தமிழகத்தில் ஆசீவகம்)

சுஜாதா (சிலப்பதிகாரம் விளக்கவுரை)

மறைந்த உயர்திரு ஆதி சங்கரன் (ஆசீவக மரபின் அழியாச் சின்னங்கள் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை)

நண்பர் கண்ணன் அவர்கள் அனுப்பிய சில தரவுகள்.

மற்றும் தமிழ் விக்கிப்பீடியா







அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்



குதிரை குத்தி பட்டான்



ஸ்ரீநிவாஸ்
மென்பொறியாளர்
வேலூர்



கிருஷ்ணகிரி தொல்லியல் தடங்கல் நிறைந்த மாவட்டம் ஆகும், பாறை ஓவியங்கள், கல்திட்டைகள், கல்படுக்கைகள் என தொல் தடயங்கள் நிறைந்த ஊர் ஆதில் குறிப்பாக அதிக அளவில் நடுகற்கள் காண கிடைக்கின்றன, குறிஞ்சி முல்லை மருதம் என மூன்று வகை நிலபரப்பு கொண்ட இடம் என்பதால் பல்வேறு பூசல்கள் ஏற்பட சாத்தியக்கூறுகள் இருந்துள்ளது, பல்லவர் சிம்மவிஷ்ணு தொடங்கி சோழர், விஜயநகர காலம் வரை கிருஷ்ணகிரியில் தொடர்ச்சியாக நடுகற்கள் காண கிடைக்கிறது, பல்வேறு ஆநிரை கவர்தல் அதனை மீட்கும் பொருட்டு இறந்தவர்கள், ஊர்அழிவு, புலிகுத்திபட்டான், பன்றிகுத்திபட்டான் என பலவகை நடுகற்கள் உண்டு, நடுகல் காட்சி அமைப்பும் இறந்த பின்னர் வீரன் வீர சுவர்க்கம் செல்லும் காட்சியும் மிக தெளிவாக வடிக்கப்பட்டிருக்கும்.

குதிரை குத்தி பட்டான் என்றால் குதிரை தாக்கி வீரன் இறந்தது போனான் அல்லது குதிரை மேல் இருந்த வீரன் தாக்கி மற்றொரு வீரன் தாக்கி இறந்ததும் என அர்த்தம் கொள்ளலாம், இது போன்ற தனித்துவமான அமைப்புகள் கொண்ட நடுகற்கள் காண்பது அரிது என்றே கூறலாம்.

கிருஷ்ணகிரி சின்ன கொத்தூரில் கிடைத்த இந்த நடுகல் தற்போது மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக உள்ளது இதன் காலம் 12 , 13 ஆம் நூற்றாண்டு ஆகும்.

கல்வெட்டு உடன் வீரன் போர்க்களத்தில் வாள் கொண்டு தாக்குவது போன்றும், அதற்கு பதில் தாக்குதல் கொடுக்கும் விதமாக மற்றொரு வீரன் குதிரையில் அமர்ந்துகொண்டு வாள் கொண்ட வீரனை ஈட்டியில் தாக்குவது போன்று இந்த நடுகல் சிற்பம் அமைந்துள்ளது.

“ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வாதியர் குமரனானச்

சக்கரசிறுபிள்ளைகளில் சொக்கந்

கருவாயன் பள்ளி

இடுபூசலில் குதிரை குத்தி பட்டான்”

பூர்வாதியரின் என்ற அரசரின் சிறு பிள்ளை (இளைய மகன்) ஆன சொக்கந் என்பவர் கருவாயன் பள்ளி என்ற இடத்தில் நடந்த இடுபூசலில் குதிரை தாக்கி இறந்து போனார் என்கிறது கல்வெட்டு.

ஹோய்சாளர் கலை மரபு





மருத்துவர் .மு.சுரேந்திரன்
நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்
கோவை,
வரலாறு மற்றும் கோயில்கட்டிடக்கலை ஆர்வலர்



பாரத துணைக்கண்டத்தில் தோன்றிப் புகழ்பெற்ற பல்வேறு அரச மரபுகளில் தவிர்க்க இயலாத ஓர் மரபு ஹோய்சாள அரச மரபு.

பொ கா 10ம் நூற்றாண்டிலிருந்து 14ம் நூற்றாண்டு வரை சுமார் 400 ஆண்டுகள் தென்னிந்திய நிலப் பரப்பில் முக்கிய ஆதிக்க சக்தியாக விளங்கியவர்கள் .

கதைவழிச் செய்தியாக இவர்களின் முன்னோர் வரலாறு தொடங்குகிறது. பிற்காலச் சாளுக்கிய மரபான கல்யாணிச் சாளுக்கியர் காலத்தில் மேற்கு கர்னாடகத்தின் குடகு பகுதியில் இருந்த கானக கிராம மான அங்காடி எனும் ஊரில் வாழ்ந்த வீரமும் விவேகமும் மிக்க இளைஞன் “சாளா” .

தான் படித்த குருகுலத்தில் நுழைந்த புலி ஒன்றை

விரட்டுவதற்காக சாளாவிற்கு உத்தரவிட எண்ணிய குருதேவர் “ஹோ சாளா “(போ சாளா) என்றார்.

உத்தரவை நிறைவேற்றிய இளைஞன் அப் பகுதியில் புகழடைந்தான்.இவன் மரபே “ஹோய்சாள “மரபாகியது.

புலியுடன் சண்டையிடும் சாளாவைச் சிற்பமாக இன்றும் பல ஹோய்சாளர் கோயில்களில் நாம் காணமுடியும். அதனைத் தங்கள் சின்னமாகவே வைத்திருந்தனர்.

ஹோய்சாள மரபு :

இம்மரபில் முதல் முடிதரித்த மன்னராக அறியப் படுபவர் முதலாம் நிருபகாமன் (970 - ...)

ஹோய்சாளர் நிலப்பரப்பு, இவருக்கு அடுத்து வந்த

இரண்டாம் நிருபகாமனால் (1027-1047)

மேற்குத்தொடர்ச்சி மலைச்சரிவிலிருந்து கிழக்காக துவாரசமுத்திரம் வரை அதிகரித்தது.எனினும் ,

இவர் கல்யாணிச் சாளுக்கியர் அரசின் கீழ் குறுநில மன்னராகவே தொடர்ந்தார்.

அடுத்து வந்த வினயாதித்யனும் ,அவர் மகன் இறையங்கனும் (1092-1102) தனித்ததோர் ஹோய்சாளப் பேர்ரசை உருவாக்க அடித்தளம் அமைத்தனர்.

இறையங்கனின் முதல் மகன் முதலாம் வல்லாளன்

சிறிது காலமே ஆட்சி செய்த பின்னர், பெரும் வீரமும். விவேகமும் உடையவனும் ஹோய்சாள மரபில் தலைசிறந்தவனுமாக பிட்டி தேவராயன் ,

விஷ்ணுவர்தன் என்ற பட்டப்பெயருடன் 1108ல் ஆட்சிக்கு வந்தார் .சுமார் 48 ஆண்டு காலம் ஆட்சி செய்த விஷ்ணு வர்தனின் காலமே ஹோய்சாளர்

வரலாற்றின் பொறக்காலமாகும்.

அரசியல் ,போர் வெற்றிகள்,கலை , கலாச்சாரம் ,

பக்திநெறி இவை அனைத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காலத்தில் தனித்த கலைமரபான

ஹோய்சாளர் கோயில் கலை கட்டுமான மரபு உச்சத்தை அடைந்தது.பல நூறு கற்றளிகள் உலகம் வியக்கும் வண்ணம் எழுந்தன.

கடம்பரும் கங்கரும் மேலைச் சாளுக்கியரும் விட்டுச் சென்ற கலைமரபை இவர் தொடர்ந்தார்.

இவருக்குப் பின் முதலாம் நரசிம்மனும் (1152-1173),இரண்டாம் வீர வல்லாளனும்(1173-1220),வீர சோமேஸ்வரனும் (1235-1263) இம்மரபைத் தொடர்ந்தனர்.

ஹோய்சாளர் ஆதிக்கமானது துவார சமுத்திரத்தை தலைநகராக கொண்டு , தென்கர்னாடகம்,மேற்கு ஆந்திரா ,வடமேற்குத் தமிழகம் வரை பரவியது.

மூன்றாம் வீரவல்லாளன் (1292-1343) காலத்தில் டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியால் பெரும்படையுடன் அனுப்ப பட்ட மாலிக் காஃபூர் ,தென்னகத்தில் பேரழிவை உண்டாக்கினார்.

துவாரசமுத்திரம் பகுதியிலிருந்த பல கோயில்கள்இடித்து தரைமட்டமாக்கப் பட்டன.

பெரும் கொள்ளைகளும் பொதுமரணங்களும் நிகழ்த்தப்பட்டன.மூன்றாம் வல்லாளனுடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையாக பெரும் தொகையும் ,யானைகளும்,குதிரைகளும்,ஆபரணங்களும் மாலிக் காபூருக்கு கிடைத்தன.

முஸ்லிம்படை பாண்டிய நாடு நோக்கி நகர்ந்தது முக்கிய அழைப்பின் பேரில்!

மூன்றாம் வீரவல்லாளனுக்குப் பிறகு ஹோய்சாள மரபு முடிவுற்றதாகத் தெரிகிறது. இதன் கிளை மரபினர் விஜயநகர அரசியலில் கலந்தனர்.

கலை வரலாறு:

கடம்பர்கள் ,காலச்சூரிகள் ,இராஷ்ட்டிரகூடர்கள், மேலைச் சாளுக்கியர்,

கங்கர்கள் என இந்தியக் கலைவரலாற்றில் தனித்த

முத்திரைகள் பதித்த பகுதியிருந்து தோன்றிய ஹோய்சாளர்கள் இயல்பிலேயே கலைப்பற்றாளர்களாகத் திகழ்ந்ததில் வியப்பில்லை. அப்பகுதியில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்திருந்த கலைஞர்களும் அவ்வாறே புரவலர்களால் ஆதரிக்கப் பட்டு வந்தனர்.

இதனால்,உலகின் மிகச்சிறந்த படைப்புகள்

ஹோய்சாளர்களால் எடுக்கப் பட்டன.

பெரும்பாலான கோயில்கள் கல்யாணிச் சாளுக்கிய மற்றும் கங்கர் கலை மரபில்

எழுந்த திராவிட மரபு கோயில் கட்டுமானங்களாகவே காணப்படுகின்றன.

சிற்பக் கலைகளில் மேலைச் சாளுக்கியர் கலைமரபு மேலோங்கிக் காணப்படுகிறது.

சில கட்டுமானங்களில் நாகர மற்றும் கலிங்க மரபும் காணக்கிடைக்கிறது .இதனை அவர்கள் மேலைச் சாளுக்கியரிடமிருந்து பெற்றதாக கருதலாம்.

இக் கலை மரபிற்கு பேராதரவு தந்தவர்கள்

விஷ்ணுவர்தனும் அவர் தேவியாரான சாந்தலாதேவியும் அவருடைய அதிகாரிகளும் ,பெருந்தனத்து மக்களும்

அவருக்குப் பின்வந்த நரசிம்மன் ,முதலாம் வீரவல்லாளன் ,வீரசோமேஸ்வரன் போன்றவர்களுமாவர்.

சுமார் 1000 கோயில்கள் இவர்களின் காலகட்டத்தில் எழும்பியுள்ளன.

கோயில் சிற்பக் கலை :

ஹோய்சாளர் கோயில் சிற்பக் கலை பல நுட்பங்களில் தனித்ததோர் அழகியலுடன் காணக்கிடைக்கின்றன.பார்த்தவுடனே சொல்லமுடியும் அளவிற்கு தனித்தன்மையானவை.

இவர்கள் ஆட்சி செய்த பகுதியில் பெருமளவில் கிடைத்த சாம்பல் நிற “பாலபாடக் கல்” எனப்படும்

குளோரைட்டிக் (Chloritic schist) கற்களும் ,அவர்களின் முன்மரபுகளும் இத்தகையதோர் தனித்தன்மையான திராவிட மற்றும் நாகர மரபுக் கலைச்சின்னங்களை அளித்ததாக உணரலாம்.

ஹோய்சாளர் கலைக்கோயில்களின் கட்டுமானச் சிறப்புகள்;

1.பெரும்பாலான கோயில் கட்டுமானங்கள் கர்னாடக ஹாசன் மாவட்டத்தில் கிடைக்கும் எரிமலைச் சாம்பல் பாறைகளான மிருதுவான குளோரைட்டிக்(soap stone)

கற்களால் ஆனவை.மண்ணிற்கு கீழேயிருந்து எடுக்கப் படும் இப்பாறைகள் புதிதாக உள்ளபோது ஈரப்பதம் மிகுந்து மிருதுவாகவும் ,சிற்பங்கள் செதுக்க ஏதுவாகவும்,

நாட்பட்ட பிறகு கடினமாகவும் மாறும் தன்மை கொண்டவை.ஹோய்சாளரின் புகழ்பெற்ற நுண்சிற்ப நுட்பங்களுக்குப் பின்புலமாக விளங்குவது இப் பாறைகளே!

2.திராவிட மரபின் அடிப்படையில் ஹோய்சாளர் விமானமானது

அதிட்டானம்

,பாதவர்க்கம்,பிரஸ்தரம்,கிரீவம்,சிகரம்,ஸ்தூபி என ஆறங்க கட்டுமானமாக அமைந்தவை.

3.பெருங்கோயில்களின் விமானம் “பிரதட்சிணப் பதம் “எனப்படும் உயர்ந்த மேடைகளின் மேல் எழுந்தவை .இவற்றை திராவிட மரபின் உப பீடமாகவோ ,நாகர மரபின் ஜகதியாகவோ கருதலாம்.

4.பரிவார ஆலயங்களும் ,திருச்சுற்றாலை மண்டபங்களும்,நுழைவாயில் கோபுரங்களும் திராவிட மரபின் படி அமைந்துள்ளன.

5.கருவறை விமானங்கள் பெரும்பாலும் ,சாலைப் பத்தி,கர்ண பத்தி ,சலீலாந்தரம் ,பஞ்சரப் பத்தி பெற்று …இரண்டிற்கும் மேற்பட்ட தளங்களுடன் அந்தராளம் வரை நீட்சி கொண்ட

“சுகநாசி” என்ற சிறப்பான அமைப்புடன் காணப்படுகின்றன.

6.பெரிய விமானங்களில் பாதவர்க்கம் எனப்படும்

சுவர் பாகம் இரண்டு பகுதிகளாக உள்ளன.கீழ்ப்பகுதி “அதோ ஜங்கம் “என அதிக அளவிலான நுணுக்கமான சிற்பத் தொகுப்புகளையும், மேல் பகுதி “ஊர்த்துவ ஜங்கம்” என எளிமையான அலங்கார உறுப்புகளையும் பெறுகின்றன.

7.சிறப்பானதோர் தனித்தன்மையதாக,விமானங்களின் எண்ணிக்கை பொறுத்து ,ஏக கூட விமானம்,துவி கூடம்,திரிகூடம்,சதுஸ்ரகூடம்,பஞ்சகூடம் என ஆலயங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

விமானங்கள் அனைத்தும் கல்லால் ஆன ஸ்தூபிகளை மட்டுமே பெற்றமைவது சிறப்பு.

8.கருவறை/கருவறைகளுக்கு எதிரில் அமையும் மண்டபம் நவரங்க மண்டபம் எனப்படும்.ஒன்றுக்கும் மேற்பட்ட கருவறைகளும் எதிரெதிர் திசையில் அமைந்து ஒரே நவரங்க மண்டபம் பெறலாம்.இம் மண்டபம் மிக்க வேலைப்பாடுகள் கொண்ட கடைசல் நுட்பத்தாலான (Lathe-turned)”சிகர ஸ்தம்பங்களையும்” , சாளரங்களையும் பெற்றமையலாம்.

9.நவரங்க மண்டபத்தின் மையப் பகுதியின் தரைத் தளத்தில் வேதிகை எனும் நாட்டிய மேடையும் , மேலே கூரையில் கவிழ் மாடம் போன்ற அற்புதமான வேலைப்பாடுகள் கொண்ட “புவனேஷ்வரி” எனும் பகுதியையும் காணலாம்.

10.பலவாறு வெளியிழுக்கப்பட்ட முக்கோண “பத்ர பாகங்கள்” உடன் வட்ட வடிவ விமானங்களான “வேசர பாணிக் கட்டுமானங்கள்” ஹோய்சாளரின் பெருங் கொடை.அதே போன்று திராவிட விமானங்களில் “பூமிஜம்” எனும் மத்திய இந்திய மரபினையும் கொண்டுவந்துள்ளனர்.

ஹோய்சாளர் சிற்பக் கலை:

ஹோய்சாளர் சிற்பக் கலை ,அதன் நுணுக்கமான வேலைப் பாடுகளுக்கும்,அழகியலுக்கும்

,வெவ்வேறுபட்ட வகைகளுக்கும் உலகப் புகழ் பெற்றவை. ஹோய்சாளரின் மரபுச் சின்னமாக கருதப் படும்

"புலியுடன் சண்டையிடும் சாளா " சிற்பத்தொகுப்பு

பல கோயில்களில் காணப் படுகின்றன.

கருவறையின் சுற்றுச் சுவரில் காணும் தொடர் சிற்பங்கள் மலைக்க வைப்பவை .புராண இதிகாசங்களில் இருந்தும் அக்காலத்திய சமய பண்பாடு சமூக நிகழ்வுகளில் இருந்தும் பல்வேறு சிற்பங்கள் எடுக்கப் பட்டுள்ளன.இச் சிற்பங்களைக் காண வசதியாக விமானத்தைச் சுற்றிலும் பிரதட்சிண மேடையாக உப பீடத்தை பல்கோணங்களில் வெளியிழுத்துள்ளனர்.

சில விமானங்களில் காணும் சலாங்கிருத பட்டிகை எனப் படும் உயர்ந்த அதிட்டானங்களில் தொடர் சிற்பங்களால் இடைவெளியின்றி நிரப்பியுள்ளனர்.

சிவன் , விஷ்ணு ,சரஸ்வதி ,லட்சுமி,காளி ,தேவர்கள் இவர்களின் அரிதான பல்வேறு மூர்த்தங்களையும் ,சார்ந்த நிகழ்வுகளையும்

நிரம்பக் காணமுடிகிறது.

உருவக சிற்பக் கலையின் உச்சமாக, பிரஸ்தரக் கோணங்களில் நிறுத்தப் பட்டுள்ள "சிலாபாலிகை"அல்லது "மதனிகா" எனப்படும் ஆடல் அழகு மகளிரின் பல்வேறு நளினச் சிற்பங்கள் ஈடு இணையற்றவை .


ஹோய்சாளர் காலம்,சிற்ப கட்டிடக் கலைஞர்களின் பொற்காலமாகத் திகழ்ந்திருந்தது.

நிறையவிடங்களில் ,தான் செதுக்கிய சிற்பங்களின் கீழே அதனைச் செதுக்கிய சிற்பிகளின் பெயர் பல்வேறு சிறப்பான பட்டங்களுடன் காணக்கிடைப்பது பெருஞ்சிறப்பு.

முடிவுரை:

சுமார் 400 ஆண்டு ஹோய்சாளர் காலம் ,தென்னிந்திய திராவிடக் கட்டுமான சிற்பக் கலையின் பெரும் அழகியலைத் தோற்றுவித்து இன்றும் நாம் கண்டு மகிழ வாய்ப்பளித்த அம் மக்கள் பெரும் வணக்கத்திற்கு உரியவர்கள்.

மரபுச் சின்னங்கள் அனைத்தும் பாதுகாக்கப் பட வேண்டியவை ,அனைவராலும் பார்த்து ரசிக்கப் பட வேண்டியவை .



மனம் மயக்கும் மதனிகைச் சிற்பங்கள்



சாலங்கிருத பட்டிகை எனும் பாதபந்த அதிட்டானம்

சிகர ஸ்தம்பம்






திராவிட -நாகர மரபுகளின் கலப்பாக உருவான பூமிஜ விமானம்



சுகநாசி என்னும் முகநீட்சியுடன் வேசர விமானம்



புலியுடன் சண்டையிடும் சாளா - ஹோய்சாளர் மரபுச் சின்னம்

நாட்டு ரக மீன்கள் அறிமுகம்





இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

#வரி ஆரால்.

#சிற்றாரால்.

#Striped spiny eel.

#Barred spiny eel.

#Indian spiny eel.

#Mastacembelus pancalus.

#Macrognathus pancalus.

தமிழ்நாட்டில் மூன்று வகையான ஆரா மீன் வகைகளை என்னால் அடையாளம் காண முடிகிறது. நேற்று நாம் பார்த்த பேயாரால் எனப்படும் பேராரால் அல்லது பெரிய ஆரால் *(Mastacembelus armatus)* முதலாவது வகை ஆகும்.

இன்று இப்பதிவில் நாம் காணும் சிற்றாரால் என்பது இரண்டாவது வகை ஆகும்.

பெயர்க்காரணம்:

பெயருக்கேற்ப மிகச் சிறிய ஆரால் மீன் வகை. அதிகபட்ச நீளமே 18 செமீ வரை இருக்கும். மேலும் இதன் உடலில் மேலிருந்து கீழாக வரிவரியாக குறுக்குக் கோடுகள் உள்ளதால் இதை வரி ஆரால் எனவும் அழைக்கலாம்.

Spiny eel என்றால் முள்ளுடைய ஆரால் மீன். அதாவது மீனின் மேல்பகுதியில் சிறு சிறு முட்கள் இருக்கும். இதனாலாயே இவ்வகை இம்மீன்கள் *spiny eel* என அழைக்கப்படுகிறது.

பரவல்:

இந்திய துணைக்கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மீன். இந்தியா, வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான், மியான்மார் நாடுகளில் பரவிக் காணப்படுகின்றன.

வாழிடம்:

ஆறு, குளம், ஏரி, கால்வாய் உள்ளிட்ட நன்னீர் நிலைகளை வாழிடமாகக் கொண்டது. ஆற்றின் கழிமுகப் பகுதிகளிலும் *(Estuaries)* காணப்படுகிறது. பொதுவாக நீர்நிலைகளின் அடிப்பகுதியில் வாழும் இம்மீன் இனப்பெருக்கத் காலத்தில் நீரின் மேல் பகுதியில் வாழும் இயல்புடையது.

தோற்றம்:

சற்றே பச்சை கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படுகிறது. இது அழுக்கு மஞ்சள் நிறமென்றும் கூறலாம். இதில் கறுப்பு புள்ளிகள் இருக்கின்றன. இவை மேலிருந்து கீழாக வரிவரியாக இருக்கும். ஆனால் தெளிவாக அவ்வாறு வரிவரியாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மீனின் மேல் முதுகுப் பகுதியில் முட்கள் இருக்கின்றன. வால் சிவப்பு நிறத்தில் மிகச்சிறியதாக இருக்கிறது.

வாய் மற்ற ஆரால் மீன்களை விட சிறியதாக இருக்கும். கீழ்தாடையை விட மேல் தாடை சற்று நீளமானது.

நீளம் மற்றும் எடை:

அதிகபட்ச நீளமே 18 செமீ அளவே இருக்கும் மிகச்சிறிய ஆரால் மீன் இனம். சராசரியாக நீளம் 13-14 செமீ அளவே இருக்கிறது. எடையும் 40 கிராம் அளவுக்குள்ளே மட்டும் இருக்கும். பொதுவாக ஆண் மீனைவிட பெண்மீன் அதிக நீளம் மற்றும் எடை கொண்டதாக இருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

முட்டையிடும் திறன்(Fecundity):

பொதாவாக மார்ச் முதல் செப்டம்பர் வரை இனப்பெருக்கக் காலமாக இருக்கிறது.

10.7 செமீ நீளம் மற்றும் 5 கிராம் எடையுள்ள மீன்கள் சராசரியாக 227 முட்டைகளை இடுகிறது. அதுவே சற்று நீளமும் (17 செமீ) எடையும் (30 கிராம்) கொண்ட மீன்கள் 8310 முட்டைகள் வரை இடுகின்றன.

இம்மீனின் உணவுகள்:

இம்மீன் அனைத்துண்ணி வகை என்றாலும் அசைவ விரும்பியாகவே அறியப்படுகிறது. சிறு பூச்சி புழுக்கள், ஓடுடைய உயிரிகள், சிறு இறால்கள், சிறு மீன்கள் போன்றவை இம்மீனின் உணவாகின்றன.

பொருளாதார முக்கியத்துவம்:

இம்மீன் உணவாகும் சிறு மீன்கள் வரிசையில் முக்கியமானது. புரதச்சத்து மிக்கது. மேலும் கால்சியம் மற்றும் இரும்பு சத்து நிரம்பியது எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சித்தர் பாடலொன்று இம்மீனின் மருத்துவ குணமொன்றை விளக்குகிறது.

"சிற்றாரால் மீன் அருந்தச் சிக்கு மலசலம்போம்

உற்ற கபங்கரப்பான் உண்டாகுஞ் - சற்றே தான்

மந்தம்உறும் தீபனம்போம் வாயிற் சலம்ஊறும்

கந்த மலர்ப் பூங்குழலே காண்"



இப்பாடலின் வாயிலாக சிறிய ஆரால் மீனையுண்பவர்கள்களுக்குப் பசி போகுமென்றும், மலசலத் தொல்லை நீங்குமென்றும் கபம், கரப்பான், வயிற்றில் மந்தம், வாயில் நீரூறல் ஆகியவை ஏற்படுமென்றும் அறியலாம்.

மேலும் அலங்கார மீன் வளர்ப்புக்காக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டு நீர்நிலைகளில் அதிகம் இருந்த இம்மீன் இனம் எண்ணிக்கையில் குறைந்து போயிருப்பதை உணர முடிகிறது.

குறிப்புதவிகள்:

1.மீன்கள் அன்றும் இன்றும் முனைவர் ச.பரிமளா, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.



நெளிக்கும் ஆரால்:

ஆரால் மீன்கள் நன்றாகஉடலை நெளிக்கும் இயல்புடையது. அதிலும் இந்த வகை ஆரால் மீன் நன்றாகவே நெளிக்கிறது.(பார்க்க காணொளி).

நன்றி!

2.Feeding and reproductive biology of Macrognathus pancalus (Hamilton, 1822), an indigenous fish species of Indian subcontinent: A Review

Sandipan Gupta.

International Journal of Research in Fisheries and Aquaculture 2016 ; 6(1) : 88 -12.

-இன்னும் நீந்துவோம்...

இலங்கையில் ஓர் இடைக்கால கல்வெட்டு



புளியங்குளம் கல்வெட்டு



நெடுங்கேணி சானுஜன்
BA(Hons) in History (spl), MA
இலங்கை



வன்னியில் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்கள் திரு. கபிலன், திரு. மணிமாறன் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வரும் தொல்லியல் ஆய்வின் போது வன்னியில் மரையடித்த குளத்திற்கு அருகே பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்றை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு அப்பிரதேச மக்களால் அங்குள்ள வயல்வெளியில் இருந்து எடுத்துவரப்பட்டு அங்குள்ள வைரவர் ஆலயத்தில் தெய்வச்சிலைகளை வைப்பதற்கான பீடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அக்கல்லில் உள்ள எழுத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த வவுனியா பிரதேசசபை ஆய்வு உத்தியோகத்தர் திரு. ஜெயதீபன் இது பற்றிய செய்தியை திரு. மணிமாறனுக்கு தெரியப்படுத்தியதன் பேரில் இக்கல்வெட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

பல வரிகளில் எழுதப்பட்டிருந்த இக்கல்வெட்டின் உடைந்த கீழ்ப்பாகமே தற்போது கிடைத்துள்ளது. அதில் ஐந்து வரிகள் காணப்படுகின்றன. அதன் முதலாவது வரியில் உள்ள எழுத்துக்கள் பல பெருமளவு சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் அவ்வரியில் சொல்லப்பட்ட பெயர்களை அல்லது செய்திகளை அறியமுடியவில்லை. ஏனைய நான்கு வரிகளையும் தெளிவாக வாசிக்க முடிகிறது.

அவற்றைத் தமிழக கல்வெட்டு அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு பின்வருமாறு வாசித்துள்ளார்.

....

ஆஞ்ஞை மூந்று த

(ன்ம) ஆஞ்ஞை வல்ல-

வரையன் சத்தியம் இ-

து அழிப்பார் நர(கம்) புகுவார்.

ஒரு ஆலயத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை அல்லது அரசால் அல்லது ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நடப்போர் அழிந்து நரகத்திற்கு போவது நிச்சயம் என்ற செய்தியை (ஓம்படைக்கிளவியாக) சொல்வதே இக்கல்வெட்டை எழுதியதன் நோக்கமாகும்.


இதில் வரும் 'மூநற்று த (ன்ம)' என்ற சொல் கி.பி 12-13 ஆம் நூற்றாண்டில் வன்னியில் செயற்பட்ட தமிழ் வணிக கணங்களை அல்லது வேளக்காரர், இடங்கை, வலங்கை ஆகிய தமிழ் படை அமைப்புக்களை குறிக்கலாம்.

வல்லவராயன் என்ற பெயர் வன்னியில் ஆட்சி புரிந்த அரசனை அல்லது விநாயகக் (கணபதி) கடவுளைக் குறித்திருக்கலாம். தமிழகத்தில் கி.பி 11-12 ஆம் நூற்றாண்டு காலத்திற்குரிய கல்வெட்டுக்களில் வரும் வல்லவராயன் என்ற பெயர் விநாயகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஆயினும் இக்கல்வெட்டின் எஞ்சிய பாகம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஊகமாகச் சொல்லப்பட்ட விளக்கம் உறுதிசெய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தற்போது கிடைத்த இக்கல்வெட்டு, அங்குள்ள காட்டுப்பகுதியில் ஒரு கட்டிட அழிபாடுகள் இடையே இருந்து எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. இதனால் இக்கல்வெட்டின் மிகுதிப்பாகம் அக்கட்டிட அழிபாடுகள் இடையே இருக்குமென எதிர்பார்க்கலாம். தொடர்ந்தும் இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கல்வெட்டின் எஞ்சிய பாகமும், வேறு கல்வெட்டுக்களும் அங்கு கிடைக்க வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் வன்னிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டென்ற வகையில் வன்னி பற்றிய ஆய்வில் இக்கல்வெட்டுக்கு தனி முக்கியத்துவம் உண்டு என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

வரலாற்றில் பெருங்களத்தூர்





"சிவத்தமிழ்ச் செல்வர்"
பி.திருச்சிற்றம்பலம் M.Sc.,M.A.,DIAE.,DCT.,
திருவாவடுதுறை ஆதீனப்பேராசிரியர்,
சென்னை – 69



பரபரப்பான நகரம் செங்கல்பட்டு மாவட்டத்தின் முக்கியப்பகுதி... ஏன் இரண்டாவது தாம்பரம்னு கூட சொல்லலாம் அந்த அளவிற்கு அசுர வளர்ச்சி குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள்...

ஒருகாலத்தில பெருங்களத்தூர்னா நிறைய பேருக்கு தெரிய வாய்ப்பில்லை... ஏன்னா காஞ்சிபுரம் மாவட்டத்தில இருந்த ஒரு சின்னஞ்சிறு கிராமம்... எங்கபாத்தாலும் ஊரை சுத்தி ஏரி... குளம்னு.. பெரிய அளவில நிறைய நீர்நிலைகளும் வாய்கால்களும் இருந்த ஊரு...!!! எப்பவும் தண்ணி இருக்குங்குறதுனால விவசாயம் செழிப்பா நடக்கும்...

(இப்பவும் சிறிய அளவில் உண்டு) கூடுவாஞ்சேரி... ஆதனூர்.. வண்டலூர்... படப்பை... பகுதிகளில் உள்ள ஏரி குளங்கள் எல்லாம் நிறைஞ்சுடுச்சுன்னா உபரி நீர் முழுசும் வடிகால் வழியா இந்த ஊருக்கு தான் வரும்....

அதோட சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்யுர மழை தண்ணியும் இங்க வந்துதான் அடையாறு ஆத்துல கலக்கும்...

இப்படி வர தண்ணியத்தான் வீணா கடலில் கலக்க விடாம பெரிய குளம் வெட்டி அந்தகாலத்தில சேமிச்சு வெச்சுருந்திருக்காங்க..

அந்தகாலத்து பெரியவங்க...

இன்னைக்கும் இந்த ஊர் நீர்வளம் மிக்க பகுதியா இருக்குன்னா அதான் காரணம்...!

அந்த காலத்திலேயே பெரிய குளம் (பெருங்குளம்) இங்க இருந்ததுனால ஊருக்கு பெருங் குளத்தூர்ன்னு பெயர்... அந்த பெயர்தான் மருவி இன்னைக்கு பெருங்களத்தூரா மாறிப்போச்சு!

மாறிப்போனது பெயர் மட்டுமா???

கால ஓட்டத்தில இங்கிருந்த பெரிய குளமும் ஏரியும் சுருங்கி சுருங்கி அடுக்குமாடி கட்டிடங்களாக மாறிப் போச்சு!

அதோட ஆற்றின் வழித்தடமும் முற்றிலும் அடைத்திட... 2017 ல் நிகழ்ந்த பேரழிவை அனைவருமே அறிவீர்கள்..

அவ்வாண்டு இப்பகுதி மக்களின் வாழ்நாளில் மறக்க முடியாத ஆண்டு...! பெருமழையால் 2 அடுக்கு 3 அடுக்கு மாடி வீடெல்லாம் மூழ்க்கிப்போய் 70% மக்கள் ஊரையே காலி பண்ணிபோகும் அளவு பெரும்நாசம்!

இயற்கையை சீண்டினால் பின்விளைவு என்னவா இருக்கும்னு கண்ணு முன்ன காமிச்சுடுச்சு...

அசம்பாவிதங்கள் நிகழ்ந்த பின்னர் தான் அரசுகள் நடவடிக்கை எடுக்கும்... இங்கயும் அப்படித்தான்.. நீர்வழித்தடத்தில் இருந்த பல வீடுகளை பின்னாளில் இடித்துத் தள்ளினர்...

பெருங்குளம் இருந்ததை அழிக்கமுடிந்ததா? தற்போது உணர்ந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்....

வரலாற்றில் பெருங்குளத்தூர் :

ஸ்ரீவைகுண்டம் பக்கத்துலயும் பெருங்குளம் ன்னு ஒரு ஊர் உண்டு தூத்துக்குடில.. தாமிரபரணித் தண்ணிய சேமிச்சு வைக்க முன்னோர்கள் வெட்டிய பெரிய குளம் இன்னைக்கும் இருக்கு... இக்குளக்கரையில் வாழ்ந்த மக்களின் நாகரீகத்தை தான் இன்னைக்கு சிவகளையில் அகழ்வாராய்ச்சி செஞ்சுட்டு இருக்காங்க! தாமிரபரணிக்கரை நகரீகமா...

ஏன் இதை சொல்ல வரேன்னா... ஆதியில் வாழ்ந்த நம்முன்னோர் மழைக்காலத்துல கிடைக்குற தண்ணியத்தான் குளங்களில் சேமிச்சு வெச்சு பக்கத்திலய வாழ்ந்திருக்காங்க..

பெருங்குளத்தூரும் அப்படிதான்.. பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்த சுவடுகள் இந்த பகுதியிலும் உண்டு...! கல்வட்டம் முதுமக்கள் தாழின்னு மூதாதையர்களின் ஈமச் சின்னங்கள் கிடைச்ச ஊரு..

கல்வெட்டில் பெருங்குளத்தூர் :

மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டில் இவ்வூர்...

" செயம்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர் கோட்டத்து நெடுங்குன்று நாட்டுப் பெருங்குளத்தூர்" என்று அழைக்கப்பட்டுள்ளது.


பரந்து விரிந்த சோழப்பேரரசின் காலத்தில் 'தொண்டைமண்டலப் பகுதி' ஜெயங்கொண்ட சோழமண்டலமாகவும் இவ்வூர் 24 கோட்டங்களிலே ஒன்றான புலியூரின் (இன்றைய வடபழனி) கீழ் இருந்த நெடுங்குன்றநாட்டைச் சேர்ந்த (வண்டலூரில் காணப்படும் பெரிய மலைக்குதாங்க நெடுங்குன்றம் என்று பெயர்) "பெருங்குளத்தூர் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வூரிலுள்ள இறைவர்

"திருவகத்தீச்சுவரமுடைய நாயனார்" என்றும் அழைக்கப்பட்டுள்ளார்...


சோழர்கள் காலத்தில் பெருங்குளத்தூராக அழைக்கப்பட்ட இவ்வூர் கால ஓட்டத்தில் பெருங்களத்தூராக மாறிவிட்டநிலையில் இவ்வூரின் இறைவன் இன்றளவும் இத்திருப்பெயரோடே திகழ்கிறார்

பழமையான ஊர்.. அகத்தியர் வழிபட்ட சோழர்கால ஆலயம்...



கல்வெட்டில் “ பெருங்குளத்தூர்”









பெருங்களத்தூர் அகத்தீசுவரர் ஆலயம்

இம்மாத புதிய தொல்லியல் கண்டுபிடிப்புகள்



கண்டெடுக்கப்பட்ட நாயக்கர் கால நடுகல் சிற்பங்களை படத்தில் காணலாம்.

அருப்புக்கோட்டை அருகே

17-ம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல் கண்டெடுப்பு

அருப்புக்கோட்டை அருகே 17-ம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நடுகல்

அருப்புக்கோட்டை அருகே கஞ்சநாயக்கன் பட்டி கிராமத்தில் ஒரே இடத்தில் 5 நடுகல் கண்டெடுக்கப்பட்டன. பாண்டியநாடு பண்பாட்டு மைய தொல்லியல் கள ஆய்வாளர்களான ஸ்ரீதர், தாமரைக்கண்ணன் ஆகியோர் இந்த கற்களை கள ஆய்வு செய்தனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:-

பொதுவாக வீரதீர செயல்களில் ஈடுபட்டு வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு அவர்களின் பெயரும், பெருமையையும் நினைவு கூறும் விதமாக நடுகல் எடுத்து வழிபடுவது சங்க காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. அந்த வகையில் தற்போது நாங்கள் கண்டறிந்த நடுகல் லானது ஒரே இடத்தில் நடப்பட்டு வழிபட்டப்பட்டு வருகிறது.

தமிழ் கல்வெட்டு

இங்கு ஒரு வீரன் வாளினை மேல் நோக்கி உயர்த்தி பிடித்த படியும் நின்ற கோலத்தில் தலைக்கு மேலே நாசி கூடுடன் செதுக்கப்பட்டுள்ளது.

மற்றொரு நடுகல்லில் ஒரு வீரன் வாளேந்திய படியும் அருகில் அவரது மனைவி கும்பிட்ட படியும் காலடியில், அவரது மகன் வணங்கியபடியும் செதுக்கப்பட்டுள்ளது. தலைக்கு மேலே சிதைந்த நிலையில் மூன்று வரிகொண்ட தமிழ் கல்வெட்டும் எழுதப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் மற்றொரு நடுகல்லில் ஒரு பெண் இருகரம் கூப்பி வணங்கியபடி நின்ற கோலத்தில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

17-ம் நூற்றாண்டு

இதனை பார்க்கும்போது கணவன் இறந்த பின்பு கைமை நோன்பு இருந்து உயிர்த்துறந்திருக்கலாம். மேலும் இங்கு காணப்படும் 4-வது நடுகல்லில் ஒரு வீரன் இருகரம் கூப்பியபடி நின்ற கோலத்தில் உருவம் இடம்பெறுகிறது. மேலும் இங்கு வித்தியாசமாக ஒரு பாம்பு உருவம் மற்றும் இடம்பெறும் நடுகல்லும் காணப்படுவது சிறப்பான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

இந்த சிற்பங்களின் காலம் நாயக்கர் காலத்தை சேர்ந்த 17-ம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினார்.



13ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கள்ளக்குறிச்சியில் கண்டெடுப்பு



விவசாயத்திற்கு நீர் மேலாண்மை கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக

நெல்லை அருகே பச்சையாற்றில் தடுப்பணை கட்டியது மருதநாயகம்



4000 ஆண்டுகளுக்கு முந்தைய

முதுமக்கள் தாழிகள் கண்டெடுப்பு



ராஜராஜன், மகேந்திரவர்மன் காலகட்ட நாணயங்கள் பாலாற்றில் கண்டெடுப்பு

பாலாற்றில் கண்டெடுக்கப்பட்ட ராஜராஜ சோழன் வாழ்நாள் கால நாணயங்கள் – முன்புறம், பின்புறம். முத்திரை சின்னம் இடும் பொருள். மணி வடிவ பித்தளை பொருள். நூல் திரிக்கும் குழல் மற்றும் ஆட்டக்காய்கள்.

மாமல்லபுரம், மார்ச் 30–

செங்கல்பட்டு பாலாற்று பகுதியில், பழங்காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளமாக, பழங்கால பொருட்கள், நாணயங்கள் ஆற்றுப்படுகையில் உள்ளனவா என, செய்யாறு அரசு கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர் மதுரைவீரன், தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார்.

ராஜராஜ சோழன் மற்றும் பல்லவர் கால செப்பு நாணயங்கள், பிற ஆபரணங்கள் உள்ளிட்டவற்றை இதற்கு முன் கண்டெடுத்துள்ளார். தற்போது, செப்பு நாணயங்கள் கண்டெடுத்துள்ளார்.

இது குறித்து, அவர் கூறியதாவது:

செங்கல்பட்டு அருகில், பாலாற்றில் ஆய்வுசெய்த போது, ராஜராஜ சோழன் காலத்தில் பயன்பாட்டில் இருந்த வட்ட வடிவ செப்பு நாணயம் கிடைத்துள்ளது.

தங்க நாணயத்தில் பொறிக்கப்பட்டிருந்த அதே முத்திரை அமைப்புடன் உள்ளது. நாணயத்தின் முன்புறம் மன்னர் நின்ற வாறும், பின்புறம் அமர்ந்தவாறும் உள்ளார்.

மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்த போட்டின் உலோக நாணயம், நின்றுள்ள காளை, பிறைநிலா மற்றும் கும்பம் ஆகிய மங்கல சின்னங்களுடன் உள்ளது.


சாதவாகனர் காலத்தைச் சேர்ந்த போட்டின் உலோக நாணயத்தில், முன்புறம் துதிக்கை தூக்கி பிளிறும் யானை, பின்புறம் உஜ்ஜயினி ஸ்ரீவத்சம் எழுத்து சின்னம் உள்ளது.

ஆடு மேய்க்கும் சிறுவன் வைத்திருந்த சிறிய மணி வடிவ பித்தளை பொருளையும் மீட்டேன். அதில், இடைக்கால குறுநில மன்னர்கள் காலத்தைச் சேர்ந்த, கிளி மற்றும் அமர்ந்த மனிதன் சின்னத்துடன் முத்திரை உள்ளது.

சுடுமண் தயாரிப்பாக, நூல் திரிக்கும் குழல், விளையாட்டு ஆட்டக்காய்கள், செப்புதுண்டில் முள், செப்பு குலச்சின்னம், கிறல்களுடன் மண்பாண்ட ஓடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

THE TIMES OF INDIA, CHENNAI
FRIDAY, APRIL 12, 2024



A COMMUNITY REMEMBERS: Workers at the construction site of the Thailand-Burma railway line

A hero stone for Tamils in Thailand

Yazhiniyan@timesgroup.com



Pic: B A Raju

Very little was known about the contribution of Tamils and the number of lives lost in the construction of the Thailand-Burma Railway (TBR) line during World War II. Now, after years of struggle, Tamils in Thailand constructed a 'hero stone' for members of the community who lost their lives in the construction of the railway tracks.

The Thailand Tamil Sangam in association with other Tamil organisations sought help from Tamils around the world to help build the hero stone. TN chief minister M K Stalin also donated ₹10 lakh for it.

Erecting 'hero stones' is a practice to honour those who lost their lives in the pursuit of protecting people and properties. Hero stones are usually worshipped by locals and find mention in Tamil literature from the Sangam era.

Though hero stones are common across the country, it is rare to spot them outside the country. But this is the first time, a hero stone for Tamils has been erected outside the country, not for protecting people or properties but for the construction of a railway line connecting two different countries.

The TBR line was constructed by the Japanese during World War II, to get closer to attacking the British in India. Construction began in 1942, for a distance of 415km, but there were several challenges as thick mosquito infested jungles needed to be cut through. Rivers and canyons had to be bridged, and mountains had to be cut away.

The Japanese involved a large number of prisoners apart from soldiers, and since the railway line had to be constructed in four months, the workers were tortured.

According to reports, more than 1.5 lakh Tamils from Malaysia, who were working as labourers on rubber farms, were taken by the Japanese to work for the railway line. In the process, more than 70,000 Tamils died.

Recently, a huge mass of skeletal remains was found in a Buddhist monastery in Kanchanaburi, a city in Thailand. It was estimated that more than 10,000 bodies were buried there. Based on DNA tests, it was confirmed they were Tamils.

Now that the hero stone is ready for inauguration on May 1, members of the Sangam met Stalin at his camp office and invited him to participate in the inauguration function.

சிற்பிகள் பெயர் பொறித்த குன்றுகள் பாதுகாப்பு சின்னங்களாக அறிவிப்பு



மாமல்லபுரம், பூஞ்சேரி பகுதி, தரைமட்ட குன்றில், பல்லவர் கால சிற்பிகள் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது; தொல்லியல் துறை தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது.



சித்திரைப் பட்டத்து நல் ஏர் விழா!

306 ஆண்டுகள் பழமையான திருக்குறள் ஓலைச்சுவடி கண்டுபிடிப்பு





தினத்தந்தி
11.4.2024 (வியாழக்கிழமை)
8 தஞ்சாவூர் 11-4-2024 ★★★★

தஞ்சை அருகே

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சோழர்கால கல்வெட்டு கண்டெடுப்பு

கோவிலுக்கு நிலக்கொடை வழங்கிய தகவல் இடம்பெற்றுள்ளது





கண்டெடுக்கப்பட்ட நடுகற்களை படத்தில் காணலாம்.

ஜவ்வாதுமலையில்

3 நடுகற்கள் கண்டெடுப்பு

திருப்பத்தூர், ஏப்.12-ஜவ்வாதுமலையில் கி.பி.12-ம் நூற்றாண்டை சேர்ந்த 3 நடுகற்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

நடுகற்கள்

திருப்பத்தூர் தனியார் கல்லூரி பேராசிரியர் மோகன் காந்தி, இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் கல்வெட்டுத்துறை இயக்குனர் வெங்கடேசன், காணி நிலம் முனிசாமி ஆகியோர் ஜவ்வாதுமலைப் பகுதியில் பெரும்பள்ளி, கல்லாவூர் ஆகிய ஊர்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது அங்கு வரலாற்று சிறப்புமிக்க 3 நடுகற்களை கண்டறிந்துள்ளனர். முதல் நடுகல் கி.பி 12-ம் நூற்றாண்டை சேர்ந்தது. 6 அடி உயரமும், 4 அடி அகலமும், முக்கால் அடி பருமனும் கொண்ட பலகை கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் குறுவாளும், இடது கையில் வில்லும், கழுத்தில் 2 ஆரங்களும், காதுகளில் பெரிய கர்ண குண்டலங்களும், தலைப்பாகை பெரிய சுங்குடனும் காணப்படுகிறது.

ஊரை காத்து உயிர் விட்ட வீரன்

மேலும் இடுப்பில் இடைக்கச்சுடன் கூடிய குறுவாளும், கால்களில் வீரக் கழல்களும், கைகளில் வீரக் கடகங்களும் அணிந்த கோலத்தில் நடுகல் வீரன் காணப்படுகிறான். நடுகல் வீரனின் தலைப்பகுதிக்கு மேலாக கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டு எழுத்துகளின் காலம் பிற்காலச் சோழர்களின் 12-ம் நூற்றாண்டிற்கு உரியதாக தோன்றுகிறது. கல்லாவூர், பெரும்பள்ளி பகுதியில் நடைபெற்ற போரில் தன் ஊரைக் காத்து உயிர் விட்ட வீரனுக்காக இந்த நடுகல் வைக்கப்பட்டுள்ளது.

புதைந்த நிலையில்

இரண்டாவது நடுகல் பெரும்பள்ளி ஊரில் விநாயகர் கோவிலுக்கு அருகே உள்ளது. இந்த ஊரைச் சேர்ந்த வண்ணான் என்ற வீரன் இறந்து போனதை இந்த நடுகல் கல்வெட்டு கூறுகிறது. 3-வது நடுகல் பெரும்பள்ளியில் உள்ள நிலத்து வரப்பில் புதைந்த நிலையில் காட்சித்தருகிறது. 3 அடி உயரமும், 2½ அடி அகலமும் உள்ளது. வலது கையில் அம்பும், இடதுகையில் வில்லும் உள்ளது. வலது தோளின் பின்புறம் அம்புக் கூடு ஒன்றுள்ளது. இடது காலுக்கு அருகில் குரைக்கும் உருவத்தில் நாய் ஒன்று உள்ளது.

மதுரை பதிப்பு 09.04.2024

தினகரன்

சேதுபதி ராணி கட்டிய கோயில்



ராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணியிலிருந்து சேதுக்கரை செல்லும் வழியில் அகத்தியதீர்த்தம் அருகில் உள்ளது சீனிவாசகப்பெருமாள் கோயில். சுமார் 220 ஆண்டுகளுக்கு முன் சேதுபதி ராணியால் மிக அழகிய கட்டடக்கலை அம்சத்துடன் கட்டப்பட்ட இக்கோயில் இன்று மிகவும் பழுதடைந்து இடிந்தநிலையில் உள்ளது. இதன் அருகில் வெள்ளைப்பிள்ளையார் கோயில் உள்ளது.

இக்கோயில் குறித்து ஆய்வு செய்த ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவன தலைவர் வே.ராஜகுரு கூறியதாவது:

கிழக்கு நோக்கியுள்ள இக்கோயில், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் என்ற அமைப்பில் உள்ளது. கருவறை விமானம், அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை கடற்கரைப் பாறைக்கற்களாலும், அதன் மேற்பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. சதுர வடிவில் நாகரமாக இரு தளங்களுடன் துவிதள விமானமாக அமைந்துள்ளது. இதன் மேல் இருந்த கலசம் சேதமடைந்து அழிந்துள்ளது.

கருவறையின் பின்பகுதி இடிந்துவிட்டது. கருவறையில் சங்கு, சக்கரம் ஏந்தி நின்ற நிலையில் சீனிவாசகப்பெருமாள் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலில் வெள்ளை மார்பிள் கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்ட நின்ற நிலையிலான திருமால் சிற்பம் ஒன்றும் உள்ளது. இதில் திருமால் உருவத்தைச் சுற்றி தசாவதாரச் சிற்பங்கள் சில உள்ளன.

ராமநாதபுரம் ஜமீன்தாரினி சேதுபதி ராணி மங்களேஸ்வரி நாச்சியார் மற்றும் முத்து விஜயரெகுநாத சேதுபதி ஆகியோரின் புத்திரியாகிய சேஷம்மா, கி.பி.1805, கார்த்திகை மாதம் 4ம் நாள், சங்குமுகம் அகத்தியதீர்த்தத்தில் சீனிவாசகப் பெருமாள் கோயிலை பிரதிஷ்டை செய்து வைத்து அபிசேகம், பூஜை, நெய்வேதனத்துக்கு காமன் கோட்டை அருகிலுள்ள நெடியமாணிக்கம் என்ற ஊரை கொடையாக விட்டுக் கொடுத்து செப்பேடு வழங்கியுள்ளார்.

செப்பேட்டின் இறுதியில் சேதுபதி ராணி மங்களேஸ்வரி நாச்சியார் கையொப்பம் இட்டுள்ளார். இதன்மூலம் மங்களேஸ்வரி நாச்சியார் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதை அறிய முடிகிறது. கோயில் பிரதிஷ்டை செய்த இரு மாதங்களுக்குப் பின் கி.பி.1806, தை 4ல் ஸ்ரீசேஷம்ம நாச்சியார் இப்பெருமான் கோயிலுக்குச் செய்த நித்திய சதா சேவை திருப்பணி வேலை கைங்கிரியம் பற்றிய தகவல் சொல்லும் கல்வெட்டு இக்கோயில் மகாமண்டபத்தின் நுழைவுவாயில் இடப்புற முன்ன தூணில் உள்ளது.

கல்வெட்டின் கீழ் இறைவனை வணங்கிய நிலையில் ராணியின் உருவம் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் கோயில் இருக்கும் இடம் அகத்தியதீர்த்தம் சேதுமாசிவபுரம் எனவும், செப்பேட்டில் சங்குமுகம் அகத்தியதீர்த்தம் எனவும் குறிப்பிடப்படுகிறது. சேதுபதி ராணி மங்களேஸ்வரி நாச்சியார் தன் மகள் ஸ்ரீசேஷம்ம நாச்சியார் பெயரில் இக்கோயிலை கட்டியுள்ளார். இதை சின்னக் கோயில் என்கிறார்கள். இவ்வாறு தெரிவித்தார்.

பழமை காப்போம்



அருமை வாசகர்களே...
பழமை ஆர்வலர்களே...

நம்மூர்களில் காலம் கடந்து நிற்கிற அத்தனையும் அடையாளங்களே. செவ்வாய் தோறும் வெளிவரும் 'பழமை காப்போம்' பகுதிக்கு உங்கள் பகுதியின் தொன்மை அடையாளங்களின் வரலாற்று பெருமைகளை, அவற்றை காக்கும் அவசியத்தை ...

முகவரி:
பழமை காப்போம்!
தினகரன், 2/2, மேலூர் மெயின்ரோடு,
உத்தங்குடி, மதுரை - 625 023

சாமி கும்பிட்டு முடிச்சதும் நல்ல நேரம் பார்த்து ஏர்க் கலப்பையில மாட்டைப் பூட்டி கற்பூரம் காமிச்சு உழவு ஓட்டுவாங்க. நெல்லோ, கடலையோ, நவதானியமோ ஏதோ ஒரு பயிரோட விதையை முளைக்கட்டவச்சு வயக்காட்டுல விதைப்பாங்க. இறுதியா எல்லாருக்கும் காப்பரிசி, பழங்களை பிரசாதமாக் கொடுப்பாங்க." என்கிறார் தஞ்சாவூரைச் சேர்ந்த ஜீவகுமார்.

உழவு ஓட்டுவதற்கான நல்ல நேரத்தை ஊரில் உள்ள கோயில்களில் எழுதி வைத்துவிடுவார்கள். ஊரே சேர்ந்து ஓரிடத்தில் நல் ஏர் பூட்டும் விழா நடத்துவதும் உண்டு. இப்போது ஏர்க்கலப்பைகள் குறைந்துவிட்டன, டிராக்டர் உழவுதான். ஆனாலும் வீட்டில் அடையாளப் பொருளாக இருக்கும் கலப்பையை தமிழ்ப்புத்தாண்டு அன்று செப்பனிட்டு வணங்குகிறார்கள் மக்கள்.

தமிழகம் முழுவதுமே தமிழ்ப் புத்தாண்டை ஏர் பூட்டும் திருவிழாவாகக் கொண்டாடுவதாகச் சொல்கிறார் கலைடிவியல் ஆய்வாளர் மணிமாறன். "காவிரிப் படுகையில் இதற்கு நல் ஏர் என்றும், தென் மாவட்டங்களில் பொன் ஏர் என்றும்







ஜீவகுமார் மணிமாறன்

பெயர். கோடை உழவின் அவசியத்தை உணர்த்தவும் கடைப்பிடிக்கவுமே நம் முன்னோர் இதைப் பின்பற்றி வந்துள்ளார்கள்.

பின்னர் இயற்கையை வணங்கி சம்பிரதாய சடங்கு முடிந்த பிறகு ஏர் பூட்டி மாட்டைக் கட்டி உழவு ஓட்டி முளைக்கட்டிய பயிரையும் விதைப்பார்கள். இயற்கையின் ஒத்துழைப்பை வேண்டி, தங்குதடையின்றி தண்ணீர் கிடைத்து, பாதிப்பு எதுவும் ஏற்படாமல் பயிர் விளைய வேண்டும். எல்லாம் நன்மையாக நடக்க வேண்டும் என்று நல் ஏர் பூட்டும் விழாவைக் கடைப்பிடித்துள்ளனர்.

கோடை உழவு செய்தால் அடி மண்ணில் உள்ள உயிர்ச் சத்துகள் மேலே வரும். விதை சன்றி முளைக்கும். இந்த அறிவியலை உணர்ந்தே இப்படியொரு விழாவை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகம் மட்டுமன்றி, புலம் பெயர்ந்து வாழ்ந்த பகுதிகளிலும்கூட சித்திரை முதல் நாள் நல் ஏர் பூட்டுதல் நிகழ்வைத் தமிழ் மக்கள் கொண்டாடுகிறார்கள்" என்கிறார் அவர்.

விவசாயம் என்பது நம் மக்களுக்குத் தொழில் அல்ல; அதுதான் பண்பாடு, அதுதான் வாழ்க்கைமுறை. காவிரிப் படுகை மக்களின் எல்லாக் கொண்டாட்டங்களும் வேளாண்மை சார்ந்தே உள்ளது. அதன் வெளிப்பாடுதான் இந்த நல் ஏர் பூட்டும் விழா!

vikatan.com | 17.4.24 ஆனந்த விகடன் | 59

ஆற்றுப்படையின் புதிய கண்டுபிடிப்பு



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் செல்லம்பட்டியில் இருந்து 3கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் வலங்காகுளம், இங்குள்ள மெய்யண்ணன் கிணறு எனும் கிணற்றிலுள்ள புதர் ஒன்றில் அரிதான ஒரு நடுகல் உள்ளது. ஆற்றுப்படை அமைப்பிலுள்ள மதுரையைச் சேர்ந்த அ.ஷீலா எனும் தமிழினியாள் என்பவர்,இத்தகவலை ஆற்றுப்படை அமைப்பிடம் தகவல் அளித்தார்.

ஆற்றுப்படை அமைப்பைச்சேர்ந்த வே.பார்த்திபன் மற்றும் இரா.ச.இராசவேல் இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டபோது அப்பகுதியிலுள்ள ஒத்த தெரு எனும் பகுதியில் மேலும் ஒரு நடுகல்லை கண்டறிந்தனர். இது குறித்து ஆற்றுப்படை அமைப்பினர் கூறியதாவது.

தென் கல்லக நாடு என அழைக்கப்படும் இப்பகுதியில் தாய் தெய்வ வழிபாடு பிராதனமாய் உள்ளது. பாப்பாம்பட்டி ஒச்சாயி, ஆச்சி கிழவி, வாலாத்தூர் அங்காளஈஸ்வரி போன்ற தெய்வ வழிபாடு இப்பகுதியில் சிறப்பாய் உள்ளது. இந்நடுகல் மூன்று பெண்களுக்கு எழுப்பப்பட்ட நினைவுக்கல்லாக கருதமுடிகிறது. சுமார் நான்கு அடி உயரமும் இரண்டரை அடி நீளமும் அரை அடி அகலமாய் இந்நடுகல் வெட்டப்பட்டுள்ளது.


சிலை இரண்டு பாகமாய் உடைந்துள்ளது. இரண்டு பெண்கள் உயரமாகவும் வலது கையில் பூவினை ஏந்தியும் இடது கையில் குடுவையும் வைத்துள்ளனர். இவர்கள் இருவரின் கீழே உயரம் குறைவாக கையில் குழந்தையை ஏந்திய நிலையில் ஒரு பெண் உருவமும் காட்டியுள்ளனர். இச்சிலைகளின் மேற்பகுதியில் திருவாசி அமைப்பு உள்ளது.

இவ்வூரின் மற்றொரு பகுதியான ஒத்த தெரு எனும் பகுதியில் 4 அடி உயர மற்றுமொரு நடுகல் காணப்படுகிறது. இதில் போர்வீரன் ஒருவரின் உருவமும் அவர் அருகே அவர் மனைவியின் உருவமும் வெட்டப்பட்டுள்ளது. இவர் தன் கணவருடன் சதியேறியவராய் கருத இடமுள்ளது. இச்சிலையின் மேற்பகுதியிலும் திருவாசி அமைப்பு வெட்டப்பட்டு வணங்கக்கூடிய நிலையில் உள்ளது.

குற்றாலம் அருவியில் கண்ட புடைப்புச் சிற்பங்கள்







உலக பாரம்பரிய நாள்

18/04/2024



தஞ்சை பெரியகோவில் சாந்தார அறையில் உள்ள இந்த ஓவியம் மாமன்னர் ராஜராஜசோழன் தன் மனைவியருடன் தில்லை நடராஜரை வணங்கும் வண்ணம் இந்த ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.